கண்வைத்திய நிபுணர்கள்
சிபார்சு செய்யும்
கண்ணாடிகளை
சரியாக கொடுப்பவர்கள்
எஸ்.எம். பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கி
அருகாமையில்)
யாழ்ப்பாணம்.

அக்கங்கள், ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூ 2/50

S.M. Fernando
OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
580, HOSPITAL ROAD,
(Near Bank of Ceylon)
JAFFNA.

சுடர்: 4 சுக்கில ஞூ ஆவணி மீ 15 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1410 முஹறம் பிறை 28 (31-08-1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 231

## தொடர்ச்சியான வேட்டுக்கள்!

யாழ்ப்பாணம், ஆக. 31

சிளிதொச்சியில் உள்ள 6ஆம் வாய்க்கால் சந்தியில் நேற்று நண்பகல் ஒரு மணியளவில் தொடர்ச்சியான துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன.

இடையிடையே மோட்டார் ஷெல் சத்தங்களும் கேட்டன.

இதனால் அந்தப் பகுதிகளில் பதற்றம் நிலவியது; (ஒ-76)

## காஸ் விலை

யாழ்ப்பாணம், ஆக. 31

யாழ்ப்பாணத்தில் காஸுக்குத் தட்டுபாடு நிலவுகின்றது: தட்டுப்பாடு காரணமாக காஸ் விலை சிலிண்டர் 225 ருபா வரை உயர்ந்துள்ளது.

# ★ மின்சார சபைத் தலைமையகம்
# திருத்த வேலையைச் செய்வதில்
# இன்னும் அக்கறை இல்லை!

## இன்று சூரிய கிரகணம்

இன்றுவியாழக்கிழமைகாலை 9 மணிக்கும் நண்பகல் 12.30 மணிக்கும் இடையில் சூரிய கிரகணம் நிகழவிருக்கிறது:

இலங்கையில் இதனைப்பார்ப்பது அரிதாக இருக்கும்: (அ-ரி)

## சுபநேரம்

(31-8-1989)

ஆவணி 15 வியாழக்கிழமை

நக்ஷத்திரம்: மகம்

சுபநேரம்:

7-35 முதல் 9-05 வரை

ராகுகாலம்:

01-35 முதல் 03-05 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## சுழற்சிமுறை மின்சாரம் இன்று வழங்கப்படமாட்டாது

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 31

யாழ் மாவட்டத்துக்கான சுழற்சி முறையான மின்சாரம் இன்று வழங்கப்படமாட்டாது என்று மின்சார சபை அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

கடந்த சில தினங்களுக்கு முன் ரயில் மூலம் வந்த ஹெவி டீசல் இருப்பு முடியும் நிலையில் உள்ளமையால் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் மின்சாரத்தை வழங்க வேண்டி உள்ளது.

இதன் காரணமாகவே செவ்வாய்க்கிழமை சுழற்சி முறை மின்சாரம் வழங்குவதை நிறுத்திப் புதன்கிழமை வழங்கினோம் என்று அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார்.

இன்று சுழற்சிமுறை மின்சாரம் வழங்கப்பட மாட்டாது என்று தெரிவித்த அந்த அதிகாரி நாளை வெள்ளிக்கிழமை மின்சாரம் வழங்குவது பற்றி இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை என்று கூறினார்: (ஒ-3)

## ஜெனரேட்டருக்கு எரிபொருள் அனுப்புவதில் கூட அசமந்தம்

கொழும்பு, ஆக. 31

வடபகுதிக்கு நீர்மின்சாரம் வழங்க வேண்டும் என்பதில் மின்சார சபையின் தலைமையகம், உரிய முறையில் இன்னும் அக்கறை காட்டவில்லை, அதனாலேயே நீர்மின்சார வசதி மீண்டும் கிடைப்பதில் இந்தளவுதாமதம் ஏற்பட்டு வருவதாக அறிய வருகிறது.

யாழ்.மாவட்டத்துக்கு விநியோகிக்கப்பட்டு வரும் சுழற்சி முறை மின்சாரத்தை ஒழுங்காக வழங்குவதற்குத் தேவையான "ஹெவி டீசல்" எரிபொருளை அனுப்பி வைப்பதில் கூடத் தலைமையகம் ஏனோ தானோ என்ற அசமந்தப் போக்குடன் நடந்து கொள்கிறதாம்-

*அநுராதபுரப் பகுதிக்கு மீண்டும் நீர்மின்சாரம் கிடைக்க முடியுமானால், அதற்கான திருத்த வேலைகளைச் செய்ய முடியுமானால் —*

*அநுராதபுரம், மதவாச்சிப் பிரதேசங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்காக மடவளை—நாலந்தா பகுதிக்கு பெரும் பணச் செலவில் ஒருவார காலத்தில் மின் இணைப்பு வேலைகளைச் செய்ய முடியுமானால் —*

*வடபகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்காக மட்டும், திருத்தவேலைகளைச் செய்யாதிருப்பதேன்? இது குறித்து அரசாங்கமும் தட்டிக்கேட்காமல் இருப்பது ஏன்?*

*இரு தரப்பாரும் இணைந்து வடபகுதிக்கு மின்சாரத் தடையை அமுல் செய்திருக்கிறார்கள் என்று கொள்ளாமல் வேறு எப்படிக் கருதுவது?*

வட பகுதிக்கான நீர் மின்சார விநியோகம் தடைப்பட்டு ஒன்றரை மாதங்களாகியும், மீளவும் வழங்க மின்சாரத் தலைமையக அதிகாரிகள் ஆக்கபூர்வமான நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை என்று விஷயமறிந்த வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

இது பற்றி விவரங்கள் வரு

(6ஆம் பக்கம் பார்க்க)

## கொலைகளை உடன் நிறுத்த மகாநாயக்க வேண்டுகோள்

கொழும்பு, ஆக 31

படுகொலைகளும், வன்செயல்களும் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்: முதலில் அமைதி நிலைநாட்டப்பட வேண்டும், அதன் பின்னர் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும்;

இவ்வாறு மல்வத்தை பீடாதிபதி ஆனந்தநாயக்க மகாநாயக்க தேரர்பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார்.

சிறிய குற்றத்துக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள எல்லோரையும் விடுவிக்கவேண்டும் எனவும் மகாநாயக்க தேரர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்:

வன்செயல்கள் மூலம் நாட்டின் நெருக்கடிநிலைக்குத் தீர்வு காண முடியாது: ஆகையால் சம்பந்தப்பட்ட அனைவரும் பேச்சுவார்த்தைமூலம் பிரச்சினையைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் — எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (அ-ரி)

## மாணவர் கல்வி குறித்து இணைப்புக் குழு அறிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 31

எமது மாணவர்கள் தமது கல்வியைத் தடங்கலின்றி தொடர்வதற்கான சுமுகமான சூழ்நிலையை உருவாக்குவதற்கு முயற்சி எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அனைத்து சக்திகளையும் யாழ் பல்கலைக்கழக இணைப்புக்குழு வேண்டியுள்ளது;

யாழ் - பல்கலைக்கழக ஆசிரியர், நிருவாக உத்தியோகத்தர், ஊழியர், மாணவர்கள் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கிய இணைப்புக் குழுவே அறிக்கை ஒன்றில் இக் கோரிக்கையை விடுத்துள்ளது.

அக்கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது.

''கடந்த சில மாதங்களாக தமிழ் மாணவர்களின் அடிப்படைச் சொத்தான கல்வி பாதிக்கப்பட்டுள்ளது குறித்து இணைப்புக்குழு கவலை தெரிவிக்கின்றது:

தமிழ் பேசும் மக்கள் தம் பிள்ளைகளின் கல்வி தொடரப்பட வேண்டுமென விரும்புவதாலும், எமது பிரதேசத்தின் முக்கிய வளமாகிய மனித வளத்தின் விருத்திக்கு கல்வி இன்றியமையாதது என்பதாலும், அவர்கள் கல்வி தொடர உதவ வேண்டும் - என்று உள்ளது. (ஒ-3)

## அணிசேரா நாடுகள் உச்சி மாநாடு:
## ரஞ்சன் தலைமையில் தூதுக்குழு செல்கிறது
### பிரதமர் செல்லும் ஏற்பாடு ரத்து

கொழும்பு, ஆக. 31

வருகிறதிங்கட்கிழமை பெல்கிறேட்டில் ஆரம்பமாக உள்ள அணிசேரா இயக்க நாடுகளின் உச்சிமாநாட்டில் கலந்து கொள்ளும் இலங்கைத் தூதுக்குழுவிற்கு வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின தலைமை வகிப்பார்.

முன்னர் அறிவிக்கப்பட்டபடி பிரதமர் டி. பி. விஜேதுங்க இலங்கை அரசுக் குழுவுக்குத் தலைமை வகிக்கமாட்டார்.

இலங்கைத் தூதுக்குழு நேற்று கொழும்பில் இருந்து பெல்கிறேட்டுக்குப் புறப்படுவதாக இருந்தது.

இலங்கைக் குழுவில் வெளியுறவுச் செயலாளர் பேர்னட் திலகரத்தின ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன், ராஜதந்திரிகளான நிஹால் ரொட்ரிக்கோ, காமினி ஜெயசிங்க ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (ஒ-எ)

## தோட்டத்துக்குச் சென்ற இளைஞர் சுட்டுக்கொலை!
### முள்ளியவளைப் பகுதியில் சம்பவம்

தோட்டத்துக்குச் சென்ற இளைஞர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டார்;

கொலையுண்டவர் முள்ளியவளை சணுக்கேணி இழக்கைச் சேர்ந்த நடராசா ஜெகதீஸ்வரன் (வயது 20) என்பவர் ஆவார்;

சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:-

கடந்த திங்கட்கிழமை பிரஸ்தாப இளைஞர் உடுப்புக்குளத்தில் உள்ள தோட்டத்துக்குச் சென்றார் எனவும் அவர் திரும்பி வராததை அடுத்து உறவினர்கள் தேடிச் சென்றனர் எனவும் அங்கு அவர் சூட்டுக் காயங்களுடன் இறந்து கிடந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் சடலம் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டது. (ஒ-92)

## தமிழ் நாட்டில் "பாரத் பந்த்":
# தி.மு. கழக ஆதரவாளர்கள் 3,000 பேர் வரையில் கைது!

சென்னை, ஆகஸ்ட் 31

தமிழ்நாட்டில் எதிர்க்கட்சிகள் நடத்திய 'பாரத் பந்த்' தொடர்பாக தி. மு. க. ஆதரவாளர்கள் சுமார் மூவாயிரம் பேர் கைது செய்யப்பட்டனர்.

நேற்றுக் காலை ரயில்கள் முன் நடத்திய மறியல் போராட்டத்தில் கலந்து கொண்டபோதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

மறியல் காரணமாக ரயில் சேவைகள் மூன்று மணித்தியாலங்கள் வரை தாமதித்தன.

'பந்த்' தமிழகத்தில் வெற்றியடைந்தது என்று முதலமைச்சர் கருணாநிதி அறிவித்தார்:

அரசு ஊழியர் பெரும்பாலோர் வேலைக்குச் செல்லவில்லை என்றும் அவர் சொன்னார்:

ட்ரெயின் சேவையை நிறுத்திவிட்டு அரசு அலுவலகங்கள் இயங்கவில்லை என்று கூறுவது சரி

(6ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



பிரதமரைப் பின்னுக்குத் தள்ளிப்போட்டு, விஜேரத்தின விஷயத்திலே முந்திக் கொண்டார் போல............ அவற்றை விஜயம் எல்லாம் கண்டசிநேர "ஷொக்" தான் போல.........!

## இனப்பிரச்சினை தீர்வு பற்றி ஈ.பி.ஆர்.எல்.எவ். அறிக்கை

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 31

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டியதின் அவசியம் தொடர்பாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மத்திய குழு உறுப்பினரும், அதன் நாடாளுமன்ற குழுத்தலைவருமான திரு. கே. பிரேமச்சந்திரன் அறிக்கைஒன்றை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையின் விவரம் வருமாறு:-

ஸ்ரீலங்கா அரசுக்கும், இந்திய அரசுக்கும் இடையில் புதுடில்லியில் பேச்சுவார்த்தை நடந்த பின்வரும் கூட ஸ்ரீலங்கா அரசானது மாகாண சபைகளுக்கான அதிகாரப்பரவலாக்கல் தொடர்பாக இதுவரை எந்த ஓர் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. அதேபோல் ஸ்ரீலங்கா அரசும் தமிழ்க்குழு ஒன்றும் இரண்டு மூன்று மாதங்களாக பேச்சுவார்த்தை நடத்தியும் கூட ஸ்ரீலங்கா அரசால் அவர்களை ஜனநாயக வழிக்கு அழைத்து வர முடியவில்லை.

இந்த நிலையில், அதாவது தமிழ் மக்களின் பாதுகாப்பு அதிகாரபரவலாக்கல்போன்ற வற்றிற்கான எந்த ஒரு முயற்

(6ஆம் பக்கம் பார்க்க)

## புதிய அமைப்புக் குறித்து வெளியிடப்பட்ட அறிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 31

''அக்டோபர் 10'' புரட்சி அமைப்பு என்ற பெயரில் புதிய அமைப்பு ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக உதயன் பணிமனைக்கு அடுத்தடுத்து அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த அமைப்பின் கொள்கையை விளக்கி அறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டிருக்கிறது:

இந்த அமைப்பின் வானொலி ஒலிபரப்புச் சேவை நாளை முதலாம் திகதி முதல் இரவு 10 மணிதொடக்கம் 11மணிவரை சிற்றலை 16, 19 அலை வரிசைகளில் கேட்கலாம் என்றும்—

முதல் 30 நிமிடங்கள் தமிழிலும் அடுத்த 30 நிமிடங்கள் ஆங்கிலத்திலும் இந்தச்சேவை ஒலிபரப்பப்படும் என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தமிழ் மண்ணில் இடம் பெறும் மனித உரிமை மீறல்

(6ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் வங்கிகள் நேற்றும் இயங்கவில்லை
### கிராண்ட்பாஸில் பொலீஸ் பலி

கொழும்பு, ஆக 31

கொழும்பில் நேற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு வங்கிகள் மூடப்பட்டிருந்தன;

துறைமுகத்தில் 18 கப்பல்களிலிருந்து உணவுப்பொருட்கள் இறக்கப்படவில்லை;

கொழும்புநகரில் கிராண்ட்பாஸ் பகுதியில் பொலீஸ்காரர் ஒருவரை இனந்தெரியாதோர் சுட்டுக் கொன்றனர்;

பொலீஸார் திருப்பிச் சுட்டதில் பலர் காயமடைந்தனர்.

மாத்தறை மாவட்டத்தில் நடந்த இரு சம்பவங்களில் மூன்று தீவிரவாத சந்தேக நபர்களை இராணுவத்தினர் சுட்டுக்கொன்றனர்;

கண்டி மாவட்டத்தில் அரசு வாகனம் ஒன்றை இனந்தெரியாதோர் தாக்கியதில் ஒருவர் கொல்லப்பட்டார். (ஒ-எ)

## அளம்பில் வீதி மக்கள் பெருமளவு இடம்பெயர்வு
### போக்குவரத்தும் துண்டிப்பு

முல்லைத்தீவு, அளம்பில்வீதி 5ஆம், 6ஆம் கட்டைப் பகுதியைச் சேர்ந்த மக்கள் அயற்கிராமங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றுவிட்டனர்.

இப்பகுதிக்கான போக்குவரத்துக்களும் நேற்று வரை துண்டிக்கப்பட்டு இருந்தன;

இப்பகுதியில் சில கல்வீடுகள் தகர்க்கப்பட்டு விட்டதாகவும், குடிசைகள்பல தீக்கிரையாக்கப்பட்டதாகவும் சொல்லப்பட்டது:

கடந்த திங்கட்கிழமை இப்பகுதியில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது தெரிந்ததே. (ஒ-92)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

CD 50 Braniu Model மோட்டார் சைக்கிள் 95 Sri இலக்கத் தொடரில் 958/41. K. K. S றோ (நாச்சிமார் கோவிலுக்கு முன்பாக) யாழ்ப்பாணம் எனும் முகவரியில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள விரும்புவோர் 1ஆம் 2ஆம் திகதிகளில் காலை 9 - 12 மணிக்கிடையில் நேரில் சந்திக்கவும்; (1776)

எம்மிடம் அண்மையில் வெளியிடப்பட்ட மருத்துவ நூல்கள் [Medical Books] அதி நவீன கம்பியூட்டர் நூல்கள் [Latest Computer Books] கதைப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள் மற்றும் சகலவிதமான வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். மண்டேலா ரேடர் [புத்தகசாலை] இல 02 பஸ் நிலையம், யாழ்ப்பாணம்; [1551]

### காணி விற்பனை

இளவாலை மாரீசன்கூடல் யாவத்தை மட்டிவளைக் காணிகளில் 12 பரப்பு தோட்டக் காணியும், 2½ பரப்பு வீட்டுக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி. பரம்சோதி, 161 ஆம் மைல் போஸ்ற் கண்டி வீதி, பரந்தன்; (1786)

### அச்சகம் விற்பனைக்கு

புதிய சைஸ் பிளேட்டின் மெஷின். புதிய எழுத்துக்கள் தளபாடங்களுடன் அச்சகம் விற்பனைக்குண்டு. தொடர்பு'- 586, c/o Uthayan, Jaffna (1788)

### நாற்றுக்கள் விற்பனைக்கு

எம்மிடம் ஊர் எலுமிச்சை மாதுளை, கொய்யா, செவ்விளநீர் நாற்றுக்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- சைவ வித்தியாவிருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி; (1780)

### தவறிவிட்டன

இல 6540 சேமிப்புப்புத்தகமும் மோட்டார் வாகன சாரதி புத்தகமும் தவறிவிட்டன. கிடைத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்திலோ அன்றி கா.ச. சற்குணநாதன் சங்கரத்தை வட்டுக்கோட்டை முகவரியிலோ ஒப்படைக்கவும். (1913)

### செங்கமாரி

கிறுநீர் பஞ்சலாகவோ சிவந்தோ போனால் செங்கமாரி. ஈரலைப்பாதிக்கும் எந்நிலையிலும் குணப்படுத்தலாம்; வாதம், வலி, குன்மம், ஆகசவாயு, சிரங்கு, காமாலை நோய்களிலும் திறமைபெற்றவர் வைத்தியர் சிதம்பரப்பிள்ளை இராசரத்தினம், வேலணை; (1845)

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், தமிழ், ஆங்கில டைப் பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள், Fudo Enterprises 89/17, மின்சார நிலைய வீதி, 8ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்; (இ/3264)

### தேவை

3ஆம, 4ஆம ஆண்டுப் பிள்ளைகளுக்கு வீட்டில் படிப்பிக்க ஆசிரியர் தேவை, தொடர்பு: புதுவாழ்வு நிலையம், கூளாவடி, ஆனைக்கோட்டை; (1768)

விராலி வீதியில் பிரபல்யமான ஸ்தாபனம் ஒன்றிற்கு ரூபா 6 லட்சத்திற்குக் குறையாமல் சேருவதற்குப் பங்காளி ஒருவர் தேவை; வியாபாரத் தன்மை: மோட்டார் Cycle & Spare Parts, T.V & Deck Sales M. மகேந்திரன் விருடியோ டில்கா, யாழ்ப்பாணம்; (பஸ்நிலையம் முன்பாக) (1769)

### கோழிக்குஞ்சுகள் விநியோகம்

Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் 30 ஆம் திகதி புதன் கிழமையும், Hybro புரொயிலர் குஞ்சுகள் 31 ஆம் திகதி வியாழக்கிழமையும் விநியோகிக்கப்படும்; முன் கூட்டியே பதிவு செய்க; சற்குணராசா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில்; (1725)

### A/L இரசாயனம்

108, பிறவுண் Road, இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ். ஆரம்பம் A/L 90, 01-09-89 வெள்ளி 6 30 a.m A/L 91, பிரிவு I 31-08-89 வியாழன் 6.30 a.m A/L 91, பிரிவு II 02-09-89 சனி 11.30 a.m A/L 89 வினு விடை 01-09-89 வெள்ளி 4.30 சனி, ஞாயிறு 3-5 p m (1758)

### இரசாயன நூல்

ஆசிரியர் சத்தீஸின் இரசாயன நூல்கள் வெளிவந்துவிட்டன. அடிப்படை இரசாயனம் பகுதி I, பகுதி II சேதன இரசாயனம் பகுதி I பகுதி II, சேதன இரசாயனம் பகுதி II பூபாலசிங்கம், ஸ்ரீ சுப்பிரமணியம், ஸ்ரீலங்கா புத்தகசாலை யாழ்ப்பாணம், சிவா மெடிக்கல்ஸ் சாவகச்சேரியிலும் நேரிலும் பெற்றுக் கொள்ளலாம்; (1759)

### பிரெஞ்சு மொழி வகுப்புகள்

ஆரம்ப பிரெஞ்சு மொழி (Beginners Course) 2- 9- 89 சனிக்கிழமை காலை 9 மணி முதல் ஆரம்பமாகின்றது: தொடர்பு: Alliance Francaise De Jaffna யாழ்: பிரெஞ்சு நட்புறவுச் சங்கம், 130, முதலாம் குறுக்குத் தெரு' யாழ்ப்பாணம்; (1713)

### மணமக்கள் தேவை

கனடாவால் வந்த யாழ் இந்து வேளாள 32 வயது I. C. M A. க்கு Accountancy படித்துக் கொண்டிருக்கும் பெண் தேவை; இந்து வேளாள 32 வயதுப் பெண்ணுக்கு டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன் வெளிநாட்டிலோ, உள்நாட்டிலோ தேவை; விபரங்களுக்கு மங்கள ஏஜென்சி கொய்யாத் தோட்டம்; யாழ்ப்பாணம்; (1757)

### Spoken English

Spoken English புதிய பிரிவு ஆரம்பம் 2. 9. 89 சனி, ஞாயிறு மட்டும். நேர 3 - 4½ p. m. தொடர்பு: S. B. Iyar, 13 வைமன் வீதி. நல்லூர்; (1821)

# வசதிக்கட்டண ஆசிரியர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தருக

## கிளிநொச்சி தொண்டர் ஆசிரியர் சங்கத்தலைவர் உரை

யாழ்ப்பாணம், ஆக. 31

இன்று வடக்கு கிழக்கில் உள்ள வசதிக் கட்டண ஆசிரியர்கள் நடத்தும் நீதியான போராட்டத்துக்கு பெற்றோர்களும், பொதுமக்களும் தொழிற்சங்கங்களும் பூரண ஆதரவைத் தர முன்வரவேண்டும்;

திருகோணமலைப் பகுதியில் தொண்டர் ஆசிரியர்களின் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய கிளிநொச்சிப் பகுதி தொண்டர் ஆசிரியர் சங்கத்தவர் திரு' நா. கோபாலராசா இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் கூறியதாவது:- காலாகாலமாக பின் தங்கிய மாவட்டங்களினதும், கிராமங்களினதும் கல்வி வளர்ச்சிக்கு பிரதிபலனை எதிர்பாராது தமது சேவைகளை அளித்து வந்த தொண்டர் ஆசிரியர்கள் இன்று நிர்க்கதியான நிலையில் தள்ளப்பட்டிருப்பது மிகவும் வேதனைக்குரியது.

போக்குவரத்துக்குக்கூட போதாத சொற்ப பணத்தை மாதம் மாதம் பெற்றுக் கொண்டு பூரணத்துவமானதும் கல்வி இலாகாவினர் திருப்திப்படக் கூடியதுமான சேவையை அவர்கள் அளித்து வந்துள்ளார்கள்.

தொண்டர் ஆசிரியர்களின் சேவையைப் பெற்ற மாணவர்களும், பெற்றோர்களும், கல்விப் பகுதியினரும் நடைபெறும் ஆசிரியர் தெரிவில் எமக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்பதில் ஆர்வம் காட்ட முன்வரவேண்டும்;

இன்று வடக்கு கிழக்கிலுள்ள வசதிக்கட்டண ஆசிரியர்கள் நடத்தும் நீதியான போராட்டத்துக்கு பெற்றோர்களும், பொதுமக்களும், தொழிற்சங்கங்களும் பூரண ஆதரவைத்தர முன்வரவேண்டும்.''

இப்படி அவர் கூறினார்;

# இளைஞரின் பொதுநல உணர்வை நாம் கற்றுக் கொள்ள வேண்டும்

## கலாசார மன்றவிழாவில் உரை

யாழ்ப்பாணம், ஆக 31

'எமது இளைஞர்கள் சிரமதானப் பணிகள் மூலம் நிதி திரட்டி தமது மன்றத்துக்கு நிரந்தரக் கட்டடம் ஒன்றை அமைத்துள்ளனர். அவர்களுடைய பொது நல உணர்வை மற்றவர்களும் கற்றுக்கொள்ள வேண்டும்.'

வட்டுக்கோட்டை — இந்து இளைஞர் கலாசார மன்றத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவு விழாவிற்குத் தலைமை வகித்த மன்றத் தலைவர் ஆசிரியர் வ. பரமேஸ்வரம்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

விழாவில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள் ஆசியுரை வழங்கினர்.

வட்டு சுப்பிரமணிய வித்தியாசாலை அதிபர் திரு: வ. யோகானந்தசிவம் யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவை செயலாளர் சி. சி. வரதராசா, சி. குமாரசாமி, க. சிறீதரன், நா. க. தங்கரத்தினம், சி. கயிலாயபிள்ளை உட்பட பலர் உரையாற்றினர்கள்.

இந்து சமயப் போட்டிப் பரீட்சையில் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் முதலிடம் பெற்ற செல்வி க. மீராவுக்கு தங்கப் பதக்கத்தை நல்லை ஆதீன முதல்வர் சூட்டினர்.

விழாவில் பண்ணிசை, வில்லிசை ஆகியன இடம் பெற்றன. [க-3]

# கேள்விப் பத்திரங்கள் கோரல்

## கமநல சேவைகள் திணைக்களம் யாழ்ப்பாண மாவட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கி உதவித்திட்டம் 1

கீழ்க்காணும் அலுவலக உபகரணங்களும் தளபாடங்களும் விநியோகம் செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள் யாழ்ப்பாண மாவட்ட கமநலசேவைகள் சிரேட்ட உதவி ஆணையாளரினால் கோரப்படுகின்றன. கேள்விப் பத்திரங்கள் 1989 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 20ஆம் திகதி நண்பகல் 12 00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். மீளளிக்கும் கேள்விப் பத்திரத் தொகையாகிய 500/-ரூபாவும் மீளளிப்புக்குரித்தற்ற கேள்வித் தொகை 25/-ரூபாவும் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டைச் சமர்ப்பிக்கும் பட்சத்திலேயே கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும்;

01. அலுவலக மேசைகள்
02. அலுவலக கதிரைகள்
03. ஆலோசனைக் கூட மேசைகள்
04. புத்தக ராக்கைகள்
05. வாங்குகள்
06. சாதாரண மேசைகள்
07. தட்டச்சு மேசைகள்
08. தட்டச்சு கதிரைகள்
09. அலுவலக தட்டுக்கள்

ஏற்கனவே இக் கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பித்து விநியோகம் செய்யத்தவறிய ஒப்பந்தக்காரர்களுக்கு கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கப்படமாட்டாது. கேள்விகள் ஒரு பொருளுக்குரிய தொகையைக் குறிப்பிட்டால் போதுமானது.

கேள்விப் பத்திரங்கள் 1989 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 19ஆம் திகதி நண்பகல் 12 00 மணி வரை விநியோகிக்கப்படும். மேலதிக விபரங்களை அலுவலக நாட்களில் இவ் அலுவலகத்தில் மு. ப. 9.00 மணி தொடக்கம் பி. ப. 4.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

க, பரமலிங்கம்
சிரேட்ட உதவி ஆணையாளர்,
கமநல சேவைகள் திணைக்களம்,
யாழ்/மாவட்டம்.

கமநல சேவைகள் திணைக்களம்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்:
1989 - 08 - 30 [சி-3309]

# உடுவில் பா. அ. சங்க கூட்டம்

மானிப்பாய், ஆக 31

பாடசாலைகளை நடத்துவது சம்பந்தமாக யாழ்ப்பாணம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பியின் அறிவுறுத்தலுக்கமைய உடுவில் கொத்தணி பாடசாலைகள் அபிவிருத்திச்சங்க பிரதிநிதிகள் கூட்டம் மருதனமடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றது;

உடுவில் கொத்தணி அதிபரும் இணுவில் அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபருமான திரு: எஸ். சோதிப்பெருமாள் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

உடுவில் கொத்தணிக்கு உட்பட்ட பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள் சுமார் ஐம்பதுக்கு அதிகமானவர்கள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில், பாடசாலைகளின் தற்போதைய நிலை மாணவர்களை பாடசாலைக்கு வரவழைப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய வழிமுறைகள் பற்றிக் கலந்துரையாடப்பட்டது. (அ-90)

## தோட்டப் பாடசாலைகளின்

# இளைப்பாறிய ஆசிரியருக்கு ஓய்வூதியம் வழங்கவேண்டும்

## தொழிற்சங்க ஆரம்பத்தில் கோரிக்கை

கொடிகாமம், ஆக. 31

''தோட்டப் பாடசாலைகளில் நிரந்தர ஆசிரியர்களாக இருந்து அரசு சுவீகரித்தபின் 10 வருடங்களுக்குக் குறைவாகச் சேவைசெய்து இளைப்பாறிய ஆசிரியர்களுக்கு ஓய்வூதியக் கொடுப்பனவுகள் இன்னும் வழங்கப்படவில்லை. இது தொடர்பாக கல்விச் சேவை அமைச்சு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும்''

அகில இலங்கை தோட்ட பாடசாலைகளின் இளைப்பாறிய ஆசிரியர்களின் தொழிற்சங்கத்தை ஆரம்பித்துப் பேசிய திரு. க. சுந்தரமூர்த்தி மேற்கண்டவாறு கூறினார்.

சாவகச்சேரி, கெருடாவில் சரஸ்வதி வித்தியாலயத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மேற்படி சங்கத்தின் உத்தியோகத்தர்களும் தெரிவு செய்யப்பட்டனர். [ச 31]

# மதுவின் பிடியில் சிக்கியோர் அதிலிருந்து தப்புவது கஷ்டம்

## கருத்தரங்கில் உரை

''மனித உயிரை மெதுவாகக் குடிப்பதில் மது இன்று முக்கிய இடத்தைப் பெற்றுவிட்டது மதுவின் பிடியில் சிக்கியவர்கள் அதில் இருந்து விடுபடுவது எளிதல்ல;

ஊரி நல்லொழுக்க வாலிபர் சங்கமும் பாலாவோடை மோகனதாஸ் நல்லொழுக்க சங்கமும் இணைந்து நடத்திய மது ஒழிப்புக்கருத்தரங்கில் பேசுகையில்டாக்டர் ஆ. பேரின்பநாயகம் மேற்கண்டவாறு கூறினார்.


அவர் மேலும் பேசுகையில் மது உடல் உள ரீதியான பல பாதிப்புக்களை உண்டாக்குகிறது; கசிப்பு அருந்துபவர்கள் பொதுவாகவே ஆறு மாதங்களில் தமது உணர்வு நிலையை இழந்து விடுவார்கள். ஞாபகசக்தியை இழந்து விடுவார்கள் இது மாத்திரமல்ல பல புதிய வியாதிகளை கசிப்பு உண்டாக்குகிறது.

அத்துடன் குடும்ப பொருளாதாரமும் பாதிக்கப்படுகிறது என்று கூறினர்.

ஆசிரியர் திரு. எஸ். ஈஸ்வரநாதபிள்ளை, திரு. எஸ். குணநாயகம், திரு. கே. செல்வராசா அதிபர் திரு. மு. கிருஸ்ணன் த. தயாபரன், திரு. இ. துரைசிங்கம் பொருட் பொருளாளர்) ஆகியோரும் கருத்துரைகளை வழங்கினர்கள்:

திரு. ஐ. பரமு கருத்தரங்கிற்குத் தலைமை வகித்தார்: [க-73]

## 71 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்



### வேலுப்பிள்ளை முருகேசு

[இளைப்பாறிய புகையிரத ஊழியர்]

ஆண்டவன் படைப்பில்: 14 - 10 - 1923 ஆண்டவன் அடியில்: 23 06 1989

குடும்பத்தின் குலவிளக்கே! இன்று நாங்கள் உங்கள் ஞாபகத்தை மீட்டிப் பார்க்கவில்லை: ஏனெனில் எங்கள் இதயங்களில் நீர் பனைஞ் செய்யப்பட்டுள்ளீர்கள்: எங்களால் அழமுடியவில்லை. எங்கள் இதயங்கள் கல்லாகி விட்டன. ஆனால் நீங்கள் உங்கள் மண்ணை நேசித்த போது நிர்ப்பந்திக்கப்பட்ட மரணம் உம்மை நேசித்ததுதான் எம்மால் ஜீரணிக்க முடியவில்லை: உங்கள் ஆத்ம சாந்திக்காகக் கண்ணீரால் அர்ச்சனை செய்கின்றோம்:

01 - 09 - 89 வெள்ளிக்கிழமை அந்தியேட்டிக் கிரியையும் வீட்டுக்கிருத்திய வைபவமும் நடைபெறவிருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வைபவத்தில் வந்து கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்:

இங்ஙனம்
மனைவி: காந்திமதி.

பிள்ளைகள்: ராதா மோகன் (பிரான்ஸ்),
சாந்த ரூபன் (பிரான்ஸ்),
மதன ரூபன் (பிரான்ஸ்), ராதிகா,
சுதந்திரரூபன் (லூவியல் கல்லூரி மாணவன்).

மருமக்கள்: பேன்ரஞ்சினி, (பிரான்ஸ்),
ஸ்ரீ லாதிகா (பிரான்ஸ்),

பேரப்பிள்ளைகள்: நிருஜன் (பிரான்ஸ்),
நிருபன் (பிரான்ஸ்),
கிரபி (பிரான்ஸ்).

சகோதரங்கள்: நாகலிங்கம், நாகம்மா:

மைத்துனர், மைத்துனி: வடிவாம்பிகை,
அமரர் வேணுகோபால்,
ரத்தினகோபால் (பிரான்ஸ்)

ஸ்ரேசன் வீதி,
தெல்லிப்பளை, [1854]


## கொம்பியூட்டர் பயிற்சி

**Diploma In Basic Programming**

புதிய பிரிவுகள்: 4 -9 89 (BATCH- 1) 9, 30 A.m
8 - 9 - 89 (BATCH- 2) 9, 30 A.m

1st Payment Rs. 50/-

**I.D.P Computer Centre**
342, K. K. S. Road, JAFFNA
(சிவன் கோவிலடி)
Branch:- 7th mile post MALLAKAM (C/3586)



## ★ வேலை வாய்ப்புக்கள் ★

யாழ்நகரில் உள்ள பிரபல்ய அனுமதி பெற்ற மதுபானச்சாலையுடன் [Bar] கூடிய ஹோட்டலில் பின்வரும் வேலை வாய்ப்புக்கள் உள்ளன.

( ) பார் கீப்பர் (Bar Keeper) (2) சமையற்காரர்கள் (Cooks)
(3) வெயிட்டர்கள் (Waiters) (4) கிளார்க் (Clerk)

அனுபவமுள்ளவர்கள் நற்சான்றுப் பத்திரங்களுடன் 10 - 09 - 1989 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

**Business Promoters (Pvt) Ltd.,**
(Secretaries Management Consultants)
307/2, Kasthuriar Road, JAFFNA. [சி-3580]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**
குடிசெய்வார்க்கு இல்லை பருவம் மடிசெய்து
மானம் கருதக் கெடும்.

**பொருள்:**
குடி உயர்வதற்கான செயல் செய்கின்றவர்க்கு உரிய காலம் என்று ஒன்று இல்லை சோம்பல் கொண்டு தம் மானத்தைக் கருதுவாரானால் குடிப்பெருமை கெடும்.

**உதயன்**
இல: 292/2, நாவலர் வீதி, தொலைபேசி: 24805
22073
யாழ்ப்பாணம்.
31 08 1989 : பெ. இல 23

# விவசாயக் கல்லூரி

வவுனியாவில் விவசாயக் கல்லூரி ஒன்று இயங்க இருப்பதாக வெளியிடப்பட்ட தகவல், விரைவில் செயல் வடிவம் பெறவேண்டும். தமிழ்ப் பகுதிகளின் விவசாய அபிவிருத்திக்கு அது போன்ற ஒரு கல்லூரி முக்கியமானதாகும். அது ஒரு நீண்டகால அடிப்படைத் தேவையாக இருந்தது எனலாம்.

தமிழ்ப் பகுதிகளின் இயற்கை வளம், சூழல் என்பனவற்றைத் தக்க முறையில் பயன்படுத்தவும், அவற்றுக்கு உகந்த விதத்தில் எமது பிரதேச விவசாயத் துறையை வளர்க்கவும் இதுவரை கவனம் செலுத்தப்படவில்லை.

கொழும்பில் உள்ள திட்டமிடுநர்கள், நாட்டுக்குப் பொதுவாக வகுக்கும் விவசாயக் கொள்கைகள், செயல் திட்டங்களே தமிழ்ப் பிரதேசங்களிலும் அமுலாக்கப்பட்டு வருவதைக் காணலாம். மாவட்ட ரீதியில் விசேட விவசாயத் திட்டங்கள், செயற்பாடுகள் என்று சொல்வதற்குத் தானும் பெரிதாக எதுவும் அமுலானதாக இல்லை.

இந்த நிலை நீக்கப்பட வேண்டும். தமிழ்ப் பிரதேசங்களின் வெவ்வேறுபட்ட மண்வளம், நீர்வளம், கனிய வளம், சுற்றுப்புறச் சூழலின் தன்மை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டும், அவற்றின் விளைபேறுகளைத் [Potentials] தக்கவாறு பயன்படுத்தும் விதத்திலும் விவசாயச் செயல் திட்டங்கள் வகுக்கப்படுதல் அவசியம். அப்போது தான் தமிழ்ப் பகுதிகளின் விவசாயத்தையும் அதனைச் சார்ந்த துறைகளையும் மேம்படுத்த முடியும்; பிரதேசப் பொருளாதார உயர்வுக்கு இது அத்தியாவசியம்; விவசாயத்தைத் தமிழ்ப் பகுதிகளின் தொழில் துறையாக்கும் இலக்குடன் திட்டங்கள் வகுக்கப்படுதல் அவசியம்.

அத்தகைய திட்டங்களை அறிமுகப்படுத்தவும், நடைமுறைப்படுத்தவும் தமிழ்ப் பகுதி விவசாயிகளிடையே பிரபல்யப்படுத்தவும், எதிர்பார்க்கும் பலனைப் பெறவும் விவசாய நுட்பங்கள், உத்திகள் தெரிந்தவர்கள் அவசியம். விவசாயக் கல்வியறிவு உடையவர்கள் தேவை.

தமிழ்ப் பிரதேச விவசாயப் பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றுக்கு நடைமுறைத் தீர்வு காணவும், விவசாயத் துறையை அபிவிருத்தி செய்யும் முகமாக ஆராய்ச்சிகளைச் செய்யவும், விவசாய அறிவுள்ளவர்களை உருவாக்கவும் விவசாய ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம் ஒன்று தேவையாகும்.

வவுனியாவில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ள விவசாயக் கல்லூரி அந்தத் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடியதாக அமைய வேண்டும்.

இதுவரை காலமும், தமிழ் மாணவர்கள் விவசாயக் கல்வி பெறுவதற்குக் குண்டசாலை செல்ல வேண்டியிருந்தது அதனால் போதிய எண்ணிக்கையில் தமிழ் மாணவர் விவசாயக் கல்வியில் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படுவதில்லை. தெரிவு செய்யப்படுவோரும் கல்வி கற்கப் பல சிரமங்களையும், கஷ்டங்களையும் அனுபவிக்க நேரிட்டது.

வவுனியாவில் விவசாயக் கல்லூரியை நிறுவுவதால் அந்தக் கஷ்டங்களையும், குறைபாடுகளையும் தீர்க்க ஏதுவாகும் என நம்பலாம். உத்தேச விவசாயக் கல்லூரியில் கால்நடை உற்பத்தி, வன அபிவிருத்தி, காணி அபிவிருத்தி, நீர்ப்பாசனம் ஆகிய துறைகளிலும் நடுத்தர தொழில் நுட்ப உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிக்கத் திட்டமிட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

விவசாயம், விலங்கு வேளாண்மை ஆகிய துறைகளில் பொதுமக்களுக்கு விஞ்ஞான ரீதியான பயிற்சி அளிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவை வெறும் திட்டங்களாகவும், தகவல்களாகவும் காகிதங்களில் எழுத்தோடு நிற்காமல் செயல்வடிவம் பெறுவதே பிரதானம். புதிய வவுனியா விவசாயக் கல்லூரி வெறும் விவசாயக் கல்வி புகட்டும் நிலையமாக மட்டுமன்றி, விவசாய ஆராய்ச்சி, பயிற்சித்துறைகளிலும் பணியாற்ற வேண்டும். அதிலும் முக்கியமானது என்னவெனில் தமிழ்ப் பிரதேசங்களின் விவசாயத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலும், அவற்றின் விவசாய விருத்தியைப் பிரதான இலக்காகக் கொண்டதாகவும் விளங்க வேண்டும். ஆரம்ப நிலையிலேயே இவை கருத்திற் கொள்ளப்பட வேண்டியவை என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.

கிளிநொச்சியில் நிறுவப்படவுள்ள யாழ். பல்கலைக்கழகத்தின் விவசாய பீடமும், வவுனியா விவசாயக் கல்லூரியும் தமிழ்ப் பகுதிகளின் விவசாய வளர்ச்சிக்கான ஊற்றுக் கண்களாக விளங்கும் விதத்தில் செயற்பட வேண்டும்.

---

**நல்லூர் உற்சவகாலச் சிறப்பம்சம்**

## பக்தர் துயர் களைவாய்!

நல்லைதனில் நாளெலாம் நல்லருள் நல்கிடும்
நஞ்சுண்ட கண்டன் மைந்தா
நாடியுன் சீர்க்கோலம் தேடியே ஓடிவரும்
பக்தர் துயர் களைவாய் கந்தா
பச்சைமயில் வாகன பன்னிருகை வேலவா
பக்தர்களுக் கினிய குமரா
பல்லாண்டு காலமாய் நிலவுகொடுந் துயர்களைய
மயிலேறி வருவாய் கந்தா!

செல்வி மா. மனோகரி

(இன்று நல்லைக் கந்தனின் பூங்காவனத் திருவிழா)

---

யாழ். மாவட்டத்தில்

# நெற் பயிர்க் காப்புறுதிக்கு ரூபா 2 லட்சம் நஷ்டஈடு

## அடுத்த வாரம் முதல் கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஆக. 31

யாழ் மாவட்டத்தில் நெல் பயிருக்கு கடந்த போகத்தில் காப்புறுதி செய்தவர்களுக்கு சுமார் இரண்டு லட்சம் ரூபா வரையில் நஷ்டஈடு அடுத்த வாரம் வழங்கப்படவிருக்கிறது

கடந்த போகமான 88/89 ஆம் ஆண்டில் நெற்பயிருக்கு காப்புறுதி செய்து வேளாண்மையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கே இந் நஷ்டஈடு வழங்கப்பட இருக்கிறது.

இக் கொடுப்பனவுக்கான தொகை யாழ்-காப்புறுதிக் கூட்டு ஸ்தாபனத்துக்கு கிடைத்துள்ளதாகவும், இவ்வாரம் இக்கொடுப்பனவுகள் வழங்கப்படும் என்றும், பாதிப்புக்கு ஏற்ப அவர்கள் காப்புறுதி செய்த பணத்திலும் கூடுதல் அளவு கிடைக்கும் என்றும் கமநல சேவை சிரேஷ்ட அதிகாரி தெரிவித்தார்.

கமநலசேவை நிலையம் வாரியாகக்கிடைக்கவிருக்கும் நஷ்ட ஈட்டு விபரம் வருமாறு:

அம்பன்—85 ஆயிரத்து 168 ரூபா 48 சதம், தொ புரம்—89 ஆயிரத்து 458 ரூபா 52சதம் புத்தூர்—4 ஆயிரத்து 881ரூபா 96 சதம், உரும்பிராய்—4 ஆயிரத்து 162 ரூபா 60 சதம்; சாவகச்சேரி—3 ஆயிரத்து 824 ரூபா 3 சதம், கைதடி—4 ஆயிரத்து 515 ரூபா 63 சதம்;

ஏனைய ஆறு கமநலசேவை நிலையங்களின் நஷ்ட ஈட்டு விவரம் விரைவில் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# தென் இந்திய அணு ஆலைகள்: சபையில் அஸ்வர் கேள்வி

கொழும்பு, ஆக. 31

தென் இந்தியாவில் அமைக்கப்படவிருக்கும் இரண்டு அணு ஆலைகளால் இலங்கைக்கு ஏற்படவுள்ள உயிராபத்துக்கள் தொடர்பாக அரசு என்ன நடவடிக்கை எடுக்க உள்ளது என்பது பற்றி ஐ.தே.க. எம்பி அல்ஹாஜ் ஏ.எச்.எம். அஸ்வர் அண்மையில் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

தென் இந்தியாவில் நிறுவப்படவுள்ள அணு ஆலைகளில் இருந்து வெளிப்படும் விஷவாயு எமக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

இதனால் சுற்றுாடல் சுகாதாரக் கேடுகள் விளைவதைத் தடுக்கமுடியாது என்று விஞ்ஞானி கிராண்வில் தர்மவர்த்தன எச்சரிக்கை செய்துள்ளார்.

இது தொடர்பாக இலங்கை அரசு பரிசீலனை செய்ததா?

அண்டை நாடுகளுக்கு ஏற்படும் விபரீதங்களைத் தடுப்பதற்கு சர்வதேச ரீதியான சட்டங்கள் ஏதும் இருக்கிறதா?

இப்படி அல்ஹாஜ் அஸ்வர் கேட்டார்.

கேள்விக்கு பதிலளிக்க எரிசக்தி — மின்சக்தி அமைச்சர் சபையில் இல்லாததால் அடுத்த கூட்டத்தொடரில் பதிலளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. (இ-எ)

## நோயாளர் எண்ணிக்கை குறைகிறது

கொழும்பு, ஆக. 31

கொழும்பு பெரியாஸ்பத்திரியில் வைத்திய சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு வரும் நோயாளரின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து விட்டது.

அண்மையில் நடைபெற்று முடிந்த வேலைநிறுத்தத்திற்கு முன்னர் தினமும் சுமார் 2 ஆயிரத்து 500 நோயாளர்கள் வார்ட்டுகளில் தங்கி சிகிச்சை பெற அனுமதி கோரி வந்தனர்.

இப்போது சுமார் 150 பேரே அனுமதி கோரிவருகின்றனர். (இ-எ)

வடமராட்சி கிழக்கில்

# திருத்தப்படாத வீதியினால் போக்குவரத்து பாதிப்பு

வடமராட்சி கிழக்கில் வத்திராயன் தொடக்கம் முள்ளியான் வரை உள்ள சுமார் 7 மைல்கள்வரை நீளமான கடற்கரை வீதி பல ஆண்டுகளாகத் திருத்தப்படாமல் உள்ளது.

மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளுக்கு ஊடாகச் செல்லும் இந்தவீதி திருத்தி அமைக்கப்படாததால் போக்குவரத்துகள் பாதிக்கப்படுகின்றன. (த-111)

மின்சார

# நிலுவை செலுத்துவதில் ஊர்காவற்றுறை முதலிடம்

இலங்கை மின்சார சபையிலிருந்து மொத்தமாக மின்சாரத்தைகொள்வனவு செய்து பாவனையாளர்களுக்கு வழங்கி வரும் வடபகுதி உள்ளூராட்சி மன்றங்களில் நிலுவைகளை செலுத்துவதில் முதலிடத்தை ஊர்காவற்றுறை பிரதேச சபை பெற்றுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேசசபையின் விசேஷ ஆணையாளரும், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபருமான திரு. எஸ். எஸ். சிவரத்தினம் எடுத்துக் கொண்ட நடவடிக்கையின் பயனாக சுமார் ஏழு இலட்சம் ரூபாய் நிலுவைகளை இப்பிரதேச சபை செலுத்தியுள்ளது

இதனால் ஊர்காவற்றுறை நாரந்தனை ஆகிய பகுதிகளில் தடைப்பட்டிருந்த மின்சார அபிவிருத்தி வேலைகள் மீண்டும் ஆரம்பிக்க வாய்ப்புக் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-16)

மின் விநியோகம் துண்டிப்பால்

# காகித ஆலை இயங்கவில்லை; தினமும் பல லட்சம் நஷ்டம்

மட்டக்களப்பு ஆக 31

மட்டக்களப்பு மாவட்டத்திற்கான மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதால் வாழைச்சேனை காகித ஆலையின் உற்பத்தி அலுவல்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

காகித ஆலையிலுள்ள ஜெனரேட்டர் மூலம் உற்பத்தியை மேற்கொள்ள எடுக்கப்பட்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை என காகித ஆலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதனால் தினசரி 5 இலட்சம் ரூபா நஷ்டம் ஏற்படுகிறது என்றும் இதுவரை 2 1/4 கோடி ரூபாவுக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்றும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார். (இ-21)

# சைவ சமய நற்சிந்தனைப் போதனை வெள்ளி தோறும்

## ஆலயங்களில் வேண்டும்

யாழ்ப்பாணம் ஆக. 31

யாழ்மாவட்டத்தில் உள்ள சகல சைவாலயங்களிலும் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் சைவ சமய நற்சிந்தனைப் போதனைகள் இடம்பெறவேண்டும் என்று யாழ்ப்பாண இந்து இளைஞர்பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது

இப்போதனைகளில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் கல்விமான்கள் கலந்து கொள்ளவேண்டும் என்றும் பேரவை கேட்டுள்ளது;

பேரவை உறுப்பினர்கள் கலந்து கொள்ள வேண்டும் என்றும் முன்கூட்டியே அறிவித்தால் உறுப்பினர்கள் கலந்து கொள்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

**சமய சந்நிதியில்**

## சித்தி விநாயகர் கும்பாபிஷேகம்

செமமடு, ஆக. 31

வவுனியா, குடியிருப்புப் பகுதியில் அருள் பாலிக்கும் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் கும்பாபிஷேக விழா எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.16 முதல் 8.50 வரையுள்ள கன்னிலக்கின சுபவேளையில் நடைபெறும் (இ-37)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஆக. 31

அரியாலை திருமகள் வீதி, ஸ்ரீமுத்து வைரவர் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 3-ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

இதற்கான கிரியைகள் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும்.

எதிர்வரும் 15 ஆம் திகதி மண்டலாபிஷேக பூர்த்திவிழா இடம்பெறும். (த)

## நாவற்குழி சித்திவிநாயகர் கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஆக. 31

நாவற்குழி சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக இருக்கிறது.

தொடர்ந்து 13 தினங்கள் உற்சவம் நடைபெறும்; அடுத்த மாதம் 14 ஆம் திகதி தேரோற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெற இருக்கிறது. (இ-3)

நல்லூர் உற்சவ காலப் போட்டி

# வெற்றியீட்டியோருக்கு இன்று பரிசில் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், ஆக. 31

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவத்தையொட்டி யாழ். மாநகரசபை நடத்திய பொது அறிவு, பண்ணிசைப் போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசில்கள் பூங்காவனத் திருவிழாவான இன்றுபிற்பகல் இரண்டு மணிக்கு மாநகரசபை ஆணையாளர் திரு. பொ. பாலசிங்கத்தால் வழங்கப்பட இருக்கின்றன.

மாநகரசபை உற்சவகால அலுவலகத்தில் நடைபெறும் இவ்வைபவத்தில் பண்ணிசை போட்டியில் முதலிடம் பெற்றவர்கள் பக்கவாத்திய சகிதம் பண்ணிசைப்பார்கள். அத்துடன் இப்போட்டிகளில் சித்தி அடைந்தவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும். (இ-8)

## உயிர் பாதுகாப்பு வார கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஆக. 31

யாழ்ப்பாணம் இந்து இளைஞர் பேரவையால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள உலக உயிர் பாதுகாப்பு வாரம் சம்பந்தமான முதலாவது கருத்தரங்கு எதிர்வரும் இரண்டாம் திகதி வேலணை பள்ளப்புலம் முருகமூர்த்தி ஆலயத்தில் நடைபெறும்;

அன்று காலை ஒன்பது மணிக்கு நடைபெறும் இக்கருத்தரங்கில் பல அறிஞர்கள் உரையாற்றுவார்கள். (இ-8)

## பாடசாலைகள் ஆரம்பம்

தாளையடி, ஆக. 30

வடமராட்சி கிழக்கில் உள்ள பாடசாலைகள் மீண்டும் மூன்றாம் தவணைக்காகத் திறக்கப்பட்டு தொடர்ந்து இயங்கி வருகின்றன;

மாணவர்கள் ஆசிரியர்கள் வரவு திருப்திகரமானதாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-167)

## பொதுச்சந்தை

தாளையடி ஆக. 31

வடமராட்சி கிழக்கில் உள்ள ஒரே ஒரு பொதுச்சந்தையான மருதங்கேணிபொதுச்சந்தைக் கட்டடங்கள் கடந்த கால சம்பவங்களினால் சேதமுற்று இன்னமும் திருத்தப்படாமல் உள்ளன. (த-144)

## முகாம் மூடப்பட்டது

வேலணை, ஆக. 31

கடந்த இரண்டு வருடங்களாக மண்டைதீவுச் சந்தியில் இயங்கி வந்த இந்திய அமைதிப் படை முகாம் வெள்ளிக்கிழமை மூடப்பட்டுவிட்டது. (த-167)

**வாசகர் திருமுகம்**

## பாரதி வீதி வாசிகள் கவலை நீங்குமா?

பாரதிவீதி கண்டி வீதியையும், கச்சேரி நல்லூர் வீதியையும் இணைக்கும் ஒர் குறுந்தூர வீதியாகும். கடந்த வருடத்துக்குமுன் இவ்வீதி இங்குள்ள மக்களாலும், மற்றும் ஒரு சிலராலும் மட்டுமே பயன்படுத்தப்பட்டது.

ஆனால் கடந்தவருடம் முதல் கச்சேரிக்கு முன் செல்லும் கண்டிவீதிப் பாதை மூடப்பட அநேக வாகனங்கள் வெவ்வேறு பாதைகளை பாவிக்கத் தொடங்கின இவ்வாறு முக்கியமாக மினிவான்கள், லொறிகள்; மோட்டார் சைக்கிள்கள் பாரதி வீதியை தற்பொழுது பாவிக்கின்றன.

இவ்வீதி யாழ்-மாநகரசபைக்கு சொந்தமானது.

இவ்வீதியை ஊர்வாசிகள் சரிவரக் கவனிக்கவில்லை. சில கிழமைகளுக்கு முன் இவ்வீதி போல் முன்பு காட்சியளித்த நக்கா வீதி திருத்தப்பட்டது. இவ்வீதியில் வாழ்வோர் பலர் இவ்வீதியும் திருத்தப்படும் என்று சந்தோஷப்பட்டனர். ஆனால் வந்தவர்கள் நக்காவீதியுடன் திரும்பிவிட்டனர்;

இவ்வீதியைத் திருத்த ஆயத்தம் எதுவும் செய்வதாக தெரியவில்லை.

இவ்வீதிப் பாவனையாளர் மனக்கவலை நீங்குமா? சம்பந்தப்பட்டோர் அக்கறை எடுப்பார்களா?

— பாரதி வீதிவாசி ஒருவர்
அரியாலை;

## யாழ்-மண்டைதீவு பாதை

மண்டைதீவையும், யாழ்ப்பாணத்தையும் இணைக்கும்வீதி தற்போது பொதுமக்களின் பாவனைக்காகத் திறந்து விடப்பட்டுள்ளது. ஆனால் இவ்வீதியின் பெரும்பகுதி குழி விழுந்த நிலையில் உள்ளது. பாலங்களும் உடைந்த காணப்படுகின்றன இதனால் இப்பாதையினூடாக பிரயாணத்தை மேற்கொள்ள முடியாதுள்ளது

பாதை திறந்து விடப்பட்ட போதிலும் மக்கள் அதனைப் பயன்படுத்த முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இதனைக் கருத்திற் கொண்டு உரிய அதிகாரிகளும் சமூக ஸ்தாபனங்களும் உடன் நடவடிக்கை எடுத்து மக்களின் குறைபாட்டைத் தீர்க்குமாறு கேட்டுக்கொள்கிறோம்;

ந. விஜயசுந்தரம்
செயலாளர்,
இந்து இளைஞர் திருமுறைக் கழகம்
மண்டைதீவு;

**கண்டதும் கேட்டதும்**

ஆர்ஜென்டீனாவின் சராசரி வருமானம் சுவீடனுடனும் சுவிட்சர்லாந்துடனும் ஒப்பிடக்கூடிய அளவுக்கு 1930 ஆம் ஆண்டுவரை இருந்தது.

ஆனால் அதன் பின்பு காலத்துக்குக்காலம் அங்கு ஏற்பட்டு வந்த பொருளாதார நலிவுகளால் அதன் பணவீக்கம் தற்போது மூன்றுவது உலக நாடுகளுடன் ஒப்பிடக் கூடிய அளவுக்குப் பின்தள்ளப்பட்டு விட்டது: பணவீக்கம் காரணமாக பாடசாலைப் புத்தகங்களின் விலைகளும் பல மடங்கு அதிகரித்து விட்டன: அதனால் மாணவர்கள் மத்தியில் பழைய புத்தகங்களுக்கு மதிப்பு உயர்ந்து விட்டது என்று ஆர்ஜென்டீனா நிலவரம் குறித்துக் குறிப்பிடுகையில் மீட்டிருக்கோ எவிச் என்ற பத்திரிகையாளர் எழுதுகிறார்:

ஆனால் இலங்கையில் நிலைமை வேறு: நாட்டின் பொருளாதாரம் முன்னெப்போதும் இல்லாதவாறு நலிந்து விட்டபோதிலும் பாடசாலை மாணவர்கள் அனுபவிக்கும் வசதிகளுக்குக் குறைச்சல் இல்லை:

இலவசக் கல்வி, இலவசப் பாடப்புத்தகங்கள் என்ற வரிசையில் தற்போது இலவச மதிய உணவுக்கும் வழி செய்யப்பட்டிருக்கிறது.

— எல்லாம் இலவசமாகக் கிடைப்பதினாலோ என்னவோ எம்மவரில் பலருக்கு அதனருமை தெரிவதில்லைப் போலும்;

— செய்தி வேலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## T. T. TOURNAMENT

சோட்டி ரெக்கிரைல் ஆதரவில் T. Y M H.A நடாத்தும் மேசைப்பந்தாட்டப் போட்டி இவ்வார இறுதியில் நடைபெற உள்ளது.

தொடர்பு:

விளையாட்டுச் செயலர்.
Y. M. H. A.
வனாக ஒழுங்கை,
திருநெல்வேலி.

(1849)



## நன்றி நவிலல்

24 - 08 - 89 அன்று நடைபெற்ற திருமதி. இராசம்மா முருகேசு அவர்களின் மரணச் சடங்கின் போது நேரில் வந்தும், தந்திகள் தபால்கள் மூலமும், வேறு பல வழிகளிலும் தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்தவர்களுக்கும், வைத்தியசாலையில் உதவி புரிந்த வைத்தியர்களுக்கும், தாதிமார்களுக்கும், சிற்றூழியர்களுக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எஸ். வி. முருகேசு,
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

விளான்
சளபூமி,
கரைநகர்.

(1785)



வலி கிழக்கு வட பகுதி
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
அச்சுவேலி.

## லொறி ரயர், ரியூப்புகள் விற்பனைக்கு

எமது சங்க இசை லொறியில் பாவித்த ரயர், ரியூப், மப்ளர் ஆகியன கூறுவிலை மூலம் விற்பனை செய்ய இருக்கின்றன. விண்ணப்பங்களை 05-09-89 ஆம் திகதிக்குப் பிந்தாமல் 'தலைவர், வலி கிழக்கு (வடபகுதி) பல நோ: கூ: சங்கம், அச்சுவேலி' என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

குறித்த பொருட்களைப் பார்வையிட விரும்புவோர் சங்க வேலை நாளில் (ஞாயிறு தொடக்கம் வெள்ளி முற்பகல் 1 00 மணிவரை) வந்து பார்த்து விண்ணப்பத்தை நீங்களே தயாரித்து மேற்குறித்த விலாசத்துக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இங்ஙனம்,
கூட்டுறவுச் சேவையிலுள்ள,
மூ. ஆனந்தகிருஷ்ணன்
பொது முகாமையாளர்.

27-08-89 (இ-3582)



விவசாயிகளுக்கு,
விதை உருளைக் கிழங்கு
## முற்பணம் கட்டுதல்

இறக்குமதி செய்யப்பட்ட டிசிறி இன (Holland) விதை உருளைக்கிழங்குக்குமேற்படி சங்கத்தில் விண்ணப்பித்தோர். ஒரு பெட்டிக்கு ரூபா 150/- வீதம் முற்பணம் கட்டவேண்டும்.

சங்கத் தலைமைக் காரியாலயத்தில் முற்பணத்தைக் கட்டி ரசீது பெற்றுக் கொள்ளல் வேண்டும். முற்பணம் கட்டிய ஒழுங்கின்படியே உற்பத்தியாளர்களுக்கு விதை உருளைக்கிழங்கு வழங்கப்படும். முற்பணம் கட்டும் இறுதித் திகதி எமது கிளைகள் மூலம் விளம்பரப்படுத்தப்படும்.

இங்ஙனம்
கூட்டுறவுச் சேவையிலுள்ள,
மூ. ஆனந்தகிருஷ்ணன்
பொதுமுகாமையாளர்.

வலி கிழக்கு (வ. ப. ப.) ப. நோ. கூ. சங்கம்,
இராச வீதி, அச்சுவேலி.

(இ-3581)



மலிவு விலையில் அறிமுகம்!
**CHILTON TRIP SWITCH**
மின்பொறியியலில் புகழ் மிக்க
OTTERMILL CHILTON LTD
ஸ்தாபனத்தாரின் தயாரிப்பு

# சுந்தர்சன

சந்தை முன் மானிப்பாய்

(C/8181)


காங்கேசன் - லங்கா

# சிமெந்து அணிகளின் கிரிக்கெட்

## இன்று--வெள்ளிவிழா மைதானத்தில்

யாழ்ப்பாணம், ஆக 31

சிமெந்து அணிகளின் கிரிக்கெட் மோதல் இன்று நடைபெறும்.

காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபன அணியும் லங்கா சிமெந்து லிமிட்டட் அணியும் இதில் மோதுகின்றன.

காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபன வெள்ளிவிழா மைதானத்தில் காலை 8. 30 மணிக்கு போட்டி ஆரம்பமாகும்.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை முகாமையாளர் (WORKS) திரு. எஸ். ஞானபண்டிதன் லங்கா சிமெந்து நிறுவன ஆலை முகாமையாளர் (PLANT) திரு. ஜனநாயகம் ஆகியோர் இந்தப்போட்டிக்கு அதிதிகளாகக் கலந்து கொள்வர். இந்த மாபெரும் போட்டி இரண்டாவது ஆண்டாக நடைபெறுகிறது.

1986 ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாவது போட்டி எந்த அணிக்கும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

87, 88 ஆம் ஆண்டுகளில் இப் போட்டி நடைபெறவில்லை.

தற்போதைய மோதலில் பங்கு பற்றும் அணி வீரர்களின் விவரம்:

லங்கா சிமெந்து நிறுவன வீரர்கள்:

இ. ஸ்ரீதரன் (அணித் தலைவர்) கா. கலைஅழகன் (உப தலைவர்) சி. தருமராசா பவசிறி, ந. சந்திரசேகரம் நா. இந்திரநாதன் கார்த்திகேசு அன்பழகன் சந்திரசிறி நரேந்திரன், சிறிகாந்தன், நாகேந்திரன் சோதிலிங்கம்.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் விளையாட்டுத்துறை ஆசிரியர் திரு. பாலசிங்கம் இந்த அணிக்குப் பயிற்சி அளிக்க அணியின் முகாமையாளர் திரு. எஸ். வேலாயுதம் அணியைத் திறம்பட நடத்தி வருகின்றார்.

காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை அணி வீரர்கள்:

க. அருந்தவராஜா (அணித்தலைவர்) கு. குணதாசன் (உப தலைவர்) எம். ஏ. செல்வராஜா சி. சிவராஜா, ச. நாகராஜா, ஜெ. கிருபநாதன், த. ஆனந்தராஜா, இ. மைலநாதன், த. ஞானவைரவமூர்த்தி ச. றமேஷ் இ. சிறீஸ்கந்தராஜா ஏ. எல். சென் ஜோர்ஜ் ச. வர்ணகுலசிங்கம் வி. உமாசங்கர் இ. குலராஜன். (த)

## இலங்கை கரபந்தாட்ட அணி ஜப்பானுக்குச் செல்கிறது

கொழும்பு, ஆக. 31

தென்கொரியத் தலைநகரான சியோலில் நடைபெறவுள்ள 5ஆவது ஆசிய சம்பியன்பட்ட கரபந்தாட்டப் போட்டிகளுக்கு முன்னோடியாக இலங்கை கரபந்தாட்ட அணி பயிற்சிப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக செப்டம்பர் மாதம் 6ஆம் திகதி ஜப்பானுக்குச் செல்கிறது.

செப்டெம்பர் மாதம் 14ஆம் திகதியிலிருந்து 21ஆம் திகதி வரை சியோலில் நடைபெறவுள்ள ஆசிய சம்பியன் பட்டப் போட்டியில் கலந்து கொள்வதற்காகத் தெரிவு செய்யப்பட்ட 12 பேர் கொண்ட குழுவே ஜப்பானுக்குச் செல்கின்றது. (க-6)


மீளாத்துயில் கொண்ட
முதலாம் வருட
நினைவஞ்சலி



திருமதி
ச. விக்டோரியா
(சந்திரா)

மலர்வு: 01- 06 1952
உதிர்வு: 31- 08- 1988

உன் மணக் கோலம்
கண்டோம் அன்று
இன்று பிணக் கோலம்
எடுத்து ஓராண்டாய்
ஆனதே
கண் கலங்கி கதறுகிறோம்
உன்னை எண்ணி
உன்னை எரித்த தீ இன்று
எம்மை வாட்டுதம்மா

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக (31 - 8 - 89) வியாழக்கிழமை காலை 6. 30 மணிக்கு மணிப்புரி சுத்தர் ஆலயத்தில் நடைபெறும் திருப்பலியில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவரின் பிரிவால் வாடும்;
தாய், சகோதரர்,
சகோதரிகள், பிள்ளைகள்
உறவினர்கள்.

204, 5 ஆம் குறுக்கு வீதி.
மணிப்புரி,
கொழும்புத்துறை
(1737)


மக்கள் முகம்

## கொத்தணி சம்மேளனம்

நெடுந்தீவு, ஆக. 31

நெடுந்தீவில் கொத்தணி பாடசாலைகளின் சம்மேளனம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள பாடசாலைகளின் கல்வி வளர்ச்சியையும் பாடசாலைக்குத் தேவையான தளபாடம் மற்றும் உபகரணங்கள் குறித்த நடவடிக்கைகளையும் இது கவனிக்கும் எனவும் கொத்தணி அதிபர் திரு. இரா. சின்னத்தம்பி கூறினார்.

புதிய நிருவாகிகளாகப் பின்வருவோர் தெரிவாகினர். தலைவர்: திரு. இரா சின்னத்தம்பி உபதலைவர் திரு ஏ. டபிள்யூ. அரியநாயகம் செயலாளர்: திரு. சி. அந்தோனிப்பிள்ளை துணைச் செயலாளர்: திரு. எஸ். கிறிஸ்தோப்பர் பொருளாளர்: திரு. கு. லிங்கநாயகம்.

இங்குள்ள அனைத்து பாடசாலைகளின் அதிபர்களுடன் பண்டிதர் சு. பசுபதி, திருமதி அ. வரோணிக்கா ஆகியோரும் செயற்குழு உறுப்பினர்களாயினர். (த-111)

## ஓய்வு பெற்றார்



யாழ்ப்பாணம், ஆக. 31

காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபனத்தில் 40 வருட சேவையின்பின் சுன்னாகத்தைச் சேர்ந்த திரு எஸ். கணபதிப்பிள்ளை ஓய்வுபெற்றுள்ளார்.

தன் திறமையால் உயர்ந்த இவர் அங்கு தொழிலாளர் பிரச்சினைகளைத் தீர்க்க பொதுத் தொழிலாளர் சங்கத்தை முதலில் ஸ்தாபித்து ஓய்வு பெறும்வரை அதன் தலைவராக செயற்பட்டார்.

சிறந்த நகைச்சுவை நாடக நடிகரும், மேடைப்பேச்சாளரும் ஆகிய இவர் பல ஸ்தாபனங்களில் அங்கம் வகித்து சேவையாற்றியுள்ளார். (இ - 3)

## பாராட்டு விழா

யாழ்ப்பாணம், ஆக 31

நல்லூர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு மேற்கு வீதியிலுள்ள விநாயகர் ஆலயத்தில் தொடர்ந்து நடைபெற்ற மகாபாரத விரிவுரையை நடத்திய சிவ. வை. நித்தியானந்த சர்மாவுக்கு இன்று வியாழன் மாலை 5 மணிக்கு பாராட்டுவிழா ஒன்று நடைபெறுகிறது.

'கர்ணன் போர்' என்ற பொருளில் இன்றைய விரிவுரை நிகழும் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ பரமசாரிய சுவாமிகள் ஆசி வழங்குவார்.

நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு மறைந்த தலைவர் அமரர் ஆ. துரைராஜசிங்கம் நினைவாக பிரார்த்தனைக் கூட்டம் நடைபெறும். அதைத் தொடர்ந்து 'தர்மர் பட்டாபிஷேகத்துடன்' பாரத விரிவுரை நிறைவுபெறும்.

## இன்று வில்லுப்பாட்டு

யாழ்ப்பாணம், ஆக 31

நல்லூர்கந்தசுவாமிகோயில் பூங்காவன உற்சவமான இன்று மாலை 4.30 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் ஈழ நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினரின் 'வள்ளி திருமணம்' வில்லுப்பாட்டு நிகழவுள்ளது.

## நடன அரங்கம்

யாழ்ப்பாணம், ஆக 31

நாட்டிய கலாகேசரி வழுவூர் இராமையாபிள்ளையின் மாணவி கல்யாணி சுந்தரலிங்கத்தின் மாணவிகளின் நடன அரங்கம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு நல்லை ஆதீனத்தில் நடைபெறும். (இ)

## நியமனம்

யாழ்ப்பாணம், ஆக. 31

வடகிழக்கு மாகாண அரசின் உள்ளூராட்சி ஆணையாளராக திரு. எஸ். பரமேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் முன்னர் பல வருடங்களாக மன்னார் மாவட்டத்தின் பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளராக பணியாற்றி வந்தது குறிப்பிடத்தக்கது. (க-13)


# A/L ACCOUNTANCY

## பிரத்தியேக வகுப்புக்கள்

CEY. A/L 89. 90, 91
LONDON. O/L, A/L.

தொடர்பு:
ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரி.
OR
50/5, சங்கிலியன் வீதி, நல்லூர்.

ஆசிரியர்:
க. தங்கராஜா B. Sc, (P. F. T) Sp, Dip in Ed.

## வெளிவந்து விட்டது

கம்பனி முடிவுக்கணக்குகளும் பகுப்பாய்வும்

கிடைக்குமிடம்:
பூபாலசிங்கம்
ஸ்ரீ லங்கா
ஸ்ரீ சுப்பிரமணியம்
புத்தகசாலைகள்

(1781)



## Jaffna College, Vaddukoddai

London Advanced Level (AEB) and Ordinary Level (GCSE) Classes

First Year will commence on *11th* Sept *1989* Students seeking admission please apply on forms available at the College Office.

Students who wish to apply for the November, *1989* examination please contact the College Office immediately.

Principal,
Jaffna College.

(C-3583)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் அப்பலவாணர் பொன்னம்பலம்

தோற்றம்: 19 11- 1920
மறைவு: 01- 08- 1989

அன்பின் உறைவிடமாய், பாசத்தின் சிகரமாய் வாழ்ந்து எம்மவரையெல்லாம் ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தி விட்டு இறைவனிடம் சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவனே! நீங்கள் மறைந்து 31 நாட்கள் சென்றாலும் இன்றும் எங்கள் கண்முன்னே நடமாடும் தெய்வமாக காட்சி தருகின்றீர்கள்.

31- 08- 1989 வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் வீட்டுக்கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
அன்பு மனைவி,
பிள்ளைகள்: பொன். புலேந்திரராசா,
பொன். யேந்திரராசா,
மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

"புஸ்பா பவனம்",
அம்மன் வீதி,
புங்குடுதீவு 3

(1784)



## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 26 - 10 - 1913

மறைவு: 05 - 09 - 1986

திதி: 31 - 08 - 1989



திரு. கணபதிப்பிள்ளை நடேசர்

எங்கள் அன்புத் தெய்வமே! ஆண்டுகள் மூன்று சென்றாலும் எங்கள் மனது ஆறவில்லை! உங்கள் நினைவுகள் எம்மைவிட்டு நீங்கவில்லை! எங்கள் அருமைத் தந்தையே! நாங்கள் உங்கள் முகம் பார்த்து அப்பா வென்று அழைக்குமுன்பே காலன் இரக்கமின்றி உங்கள் உயிரைக் கவர்ந்துவிட்டானே! அப்பாவென்று சொல்ல யாருமற்று நிற்கின்றோம். எங்கள் குறைகளை யாரிடம் முறையிடுவது? என்றும் எங்கள் உள்ளத்தில் உலாவி எங்களை ஆசீர்வதிப்பீர்களாக! உங்கள் ஆத்மா சாந்திபெற எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்,
மனைவி, பிள்ளைகள்.
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

கதுமலை வடக்கு,
மானிப்பாய்.

(1764)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

● அரசு அதிருப்தியாளர் மீது

# சீனாவில் இரகசியமரணதண்டனை நிறைவேற்றம்; நிறுத்தும்படி மன்னிப்புச்சபை வேண்டுகோள்!

லண்டன், ஆக 31

ஜனநாயக கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களுக்கு இரகசியமாக மரணதண்டனை நிறைவேற்றுவதை உடனடியாக நிறுத்தும்படி சீன அரசாங்கத்தை சர்வதேச மன்னிப்புச் சபை கோரியிருக்கிறது.

கடந்த ஜூன் மாதம் ஜனநாயக உரிமைகோரி போராடி வந்த மாணவர்மீது சீன அரசு இராணுவ நடவடிக்கை எடுத்தது.

கிளர்ச்சியின் நடுநாயகமான பீஜிங் நகரின் தியனன்மன் சதுக்கத்தை முற்றுகையிட்ட சீன மக்கள் இராணுவம் மேற்கொண்ட தாக்குதலில் ஆயிரக்கணக்கான மாணவர், பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

ஆயிரக்கணக்கானோரை சீன அரசு கைது செய்து சிறையில் அடைத்தது.

காவலில் வைக்கப்பட்ட பலர்மீது இரகசிய விசாரணை நடத்தி அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. பலருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

ஒரு மாதத்தில் மட்டும் இருநூறுக்கு அதிகமானவர்களுக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டதாக பீஜிங்கிலிருந்து தப்பி பாரிஸ் வந்த சீன மாணவர் தலைவர் ஒருவர் முன்னர் தெரிவித்திருந்தார்.

இப்போது சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்ட அறிக்கை ஒன்றில்,

சீன இராணுவத்தினால் பிடிக்கப்பட்ட பலருக்கு மரண தண்டனை இரகசியமாக நிறைவேற்றப்பட்டு வருவதாகத் தகுந்த ஆதாரங்கள் கிடைத்திருப்பதாக அறிவித்திருக்கிறது.

மரணதண்டனைக்குள்ளானவர்கள் பற்றிய விபரங்களை ரகசியமாக வைத்திருக்கும்படி சீன அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

மனித உரிமைமீறல் நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாம் என்றும் சீன அரசுக்கு சர்வதேச மன்னிப்புச் சபை அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது. (எ)

## பாண்டிச்சேரி விமான நிலையம்

பாண்டிச்சேரி, ஆக. 30

இந்தியாவில் பாண்டிச்சேரி மாநிலத்திற்கு வருகிற மாதம் 2ஆம் திகதி முதல் விமான சேவை விஸ்தரிக்கப்படவுள்ளது.

கருவடிக்குப்பம் என்னுமிடத்தில் புதிய விமான நிலையம் ஒன்று இதற்காகக் கட்டப்பட்டு வருகிறது. (எ)

## ஆப்கன் கெரில்லாக்கள் மத்தியில் கருத்து வேறுபாடு

ஆப்கன் கெரில்லாக் குழுக்களிடையேயான கருத்து வேற்றுமை தீவிரமடையத் தொடங்கியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

கெரில்லாக் குழுக்கள் அமைத்துள்ள இடைக்கால அமைச்சரவையில் இருந்து ஹெக்மதியார் தலைமையிலான கெரில்லா அமைப்பு வெளியேறியதைத் தொடர்ந்து கருத்து வேற்றுமை பகிரங்கமாக வெளியாகியது.

ஹெக்மதியார் தலைமையிலான அமைப்பைச் சேர்ந்த 35 கமாண்டோக்களை போட்டிக் குழுக்கள் அண்மையில் பதுங்கியிருந்து தாக்கிக் கொன்றன என்பது தெரிந்ததே! (எ)

## காமன்வெல்த் விளையாட்டு; கறுப்பு நாடுகள் பகிஷ்கரிப்பு!

வெலிங்டன், ஆக. 30

நியூசிலாந்தில் அடுத்த ஆண்டு ஜனவரியில் நடைபெறவுள்ள பொதுநலவாய அமைப்பு நாடுகளின் விளையாட்டுவிழா பாதிப்படையலாம் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கறுப்பு இனநாடுகள் விழாவைப் பகிஷ்கரிக்கப் போவதாக அறிவித்து உள்ளன.

இதனால் விழாவினால் கிடைக்கலாம் என எதிர்பார்க்கப்படும் வருமானத்தில் ஒரு கோடியே 50 லட்சம் டாலர் பணம் துண்டு விழலாம் என்று நியூசிலாந்து அரசு அறிவித்துள்ளது.

இங்கிலாந்து, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளின் வீரர்கள் தென்ஆபிரிக்காவிற்குச் சென்று கிரிக்கெட் விளையாட ஒப்புக்கொண்டுள்ளனர். இதனைக் காரணம் காட்டியே கறுப்பு இன நாடுகள் விழாவைப் பகிஷ்கரிக்கப் போவதாக அறிவித்துள்ளன. (எ)

## இந்திய மார்க்ஸிய கம்யூ. நிலைப்பாடு

திருச்சூர், ஆக. 30

வருகிற பொதுத்தேர்தலில் தேசிய முன்னணி ஆட்சியைப் பிடித்தாலும் மார்க்ஸிய கம்யூனிஸ்ட்கட்சி அந்த அரசில் அங்கம் வகிக்கப் போவது இல்லை.

கேரள மாநில முதலமைச்சரும் மார்க்ஸிய கம்யூனிஸ்ட் தலைவர்களில் ஒருவருமான திரு: இ. கே. நாயனார் முன் சன்டொரு தெரிவித்தார்.

## சுவாமிஜி மரணம்

ராய்ப்பூர், ஆக. 30

ராமகிருஷ்ணமிஷனைச் சேர்ந்த ஆத்மானந் சுவாமி விபத்து ஒன்றில் மரணமானார்.

ராய்பூர் மிஷன் தலைவரான இவர் பயணம் செய்த ஜீப் வண்டி கோலா கிராமத்திற்கு அருகில் விபத்துக்குள்ளானது. (எ)

## இந்தியா கவலை

புதுடில்லி, ஆக. 30

பௌத்த மதத்தைச் சேர்ந்த சக்மா அகதிகள் சிட்டகொங் மலைப்பிரதேசத்திலிருந்து திரிபுரா மற்றும் மிசோராம் மாநிலங்களில் தஞ்சமடைவது குறித்து இந்திய அரசு பங்களாதேஷிடம் கவலை தெரிவித்திருக்கிறது. [எ]

## கென்ய ஜனாதிபதி உத்தரவு!

நைரோபி, ஆக. 30

கென்யாவின் வன விலங்கு சரணாலயங்கள் என்று பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் அத்துமீறி பிரவேசிப்பவர்களை கண்டவுடன் சுடும்படி கென்யா ஜனாதிபதி டானியல் அரப்மொய் பாதுகாப்புப் படையினருக்கு உத்தரவிட்டிருக்கிறார். (எ)

## நீதிபதிகளுக்கு பாதுகாப்பு வழங்க கொலம்பியா தீவிரம்

வாஷிங்டன், ஆக 30

போதைவஸ்துக் கடத்தல் தடுப்பு நடவடிக்கைகளுக்கு உதவுவதற்காக அதிகநிதி உதவி வழங்கும்படி கொலம்பியா அரசு, அமெரிக்காவிற்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஒரு கோடி 90 லட்சம் டாலர் நிதி உதவி தேவை என்று கொலம்பியா நீதி அமைச்சர் திருமதி மொனிக்கா வாஷிங்டனில் தெரிவித்தார்.

இந்த நிதி உதவி, போதைவஸ்துக் கடத்தல்காரர்களின் தாக்குதலில் இருந்து நீதிபதிகளைக் காப்பாற்ற அவர்களுக்கு குண்டு துளைக்காத கார்களை வாங்கிக் கொடுக்கவே பயன்படுத்தப்படும் என்று நீதி அமைச்சர் தெரிவித்தார். (எ)

## அமெ தூதர் திருப்பி அழைப்பு

வாஷிங்டன், ஆக. 30

பல்கேரியாவில் இருந்து தனது தூதரை அமெரிக்கா நேற்று திருப்பி அழைத்துக் கொண்டது.

பல்கேரியாவில் உள்ள துருக்கி இனத்தவர் மீது மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு ஆட்சேபம் தெரிவித்தே அமெரிக்க அரசு இந்தமுடிவை எடுத்தது; (எ)

## பிரதமர் தெரிவு தேர்தலின் பின்னர்; மேற்கு வங்காள முதல்வர் அறிவிப்பு!

சென்னை, ஆக 30

எதிர்க்கட்சிகள் சார்பில் பிரதமர் பதவியை ஏற்கப் போகிறவர் யார் என்பது பொதுத் தேர்தல் முடியும் வரை தீர்மானிக்கப்படமாட்டாது.

மேற்கு வங்காள முதலமைச்சர் ஜோதி பாசு முன்தினம் தகவல் செய்தியாளரிடம் வெளியிட்டார்;

பொதுத் தேர்தலில் தேசிய முன்னணி வெற்றியீட்டிய பின்னர்தான் பிரதமர் யார் என்பது தீர்மானிக்கப்படும்;

தேசிய முன்னணியின் தற்போதைய இலட்சியம் இந்திரா காங்கிரஸ் அரசைத் தோற்கடிப்பதே ஆகும்.

இப்படி ஜோதி பாசு சொன்னார். (எ)

## அகில இந்திய வானொலியிலும் அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

பிரதமர் ராஜீவ் காந்தி அரசுக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் இடையேயான பலப் பரீட்சையாக இன்று இந்தியா முழுவதும் 'பாரத் பந்த்' இடம்பெற்றது.

பிரதமர் ராஜீவ்பதவி விலக வேண்டும் என்று கோரி ஆறு எதிர்க்கட்சிகள் அங்கம் வகிக்கும் தேசிய முன்னணி இந்த 'பந்த்'தை நடத்தியது;

புதுடில்லி நகரில் கடைகளைப் பூட்டி வைக்கும் உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு எச்சரிக்கை விடுத்தது.

அகில இந்திய வானொலி அலுவலகத்தினுள் நேற்றிரவு தங்கியிருந்த ஊழியர்கள் அரசு எதிர்ப்புச் சுலோகங்களைக் கோஷித்தனர், நிர்வாகத்தினால் வழங்கப்பட்ட உணவுப் பார்சல்களை அவர்கள் தூக்கி எறிந்தனர். (எ)


## "ஷப்ரு" வழங்கும் புதிய வட்டி வீதம்

### நிலையான முதலீட்டுத் திட்டம்

| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | — | 15% |
| 6 மாதங்கள் | 15% | 17% |
| 12 மாதங்கள் | 18% | 20% |
| 24 மாதங்கள் | 21% | 23% |
| 36 — | 22% | 24% |

### நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984 → 85 | 1985 → 86 | 1986 → 87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2,230,000 | 4,365,000 | 5,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,335 | 3,030,474 | 5,425,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,386 | 100,577,482 |
| வங்கிக் கடன்கள் | 1 791,516 | 8,283,878 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,206,887 | 25,811,713 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,875 |
| வரிசெலுத்துமுன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரிசெலுத்தியபின் தேறிய லாபம் | 1,356,206 | 1,372,825 | 2,330,012 |
| வங்கிகளுக்கான சலுகைகள் | | | |

நம்பிக்கையுடன் சேமிக்க "ஷப்ரு"வை நாடுங்கள்

நிதித்துறையில், உங்கள் நண்பன் அவனே!

பணிப்பாளர் சபை

திரு. எல். ஈ. கருணாரத்ன, சட்டத்தரணி, சமாதான நீதிவான் (தலைவர்)

திரு. எஸ். பாலசுப்பிரமணியம் (A. I. B. Lond.), முகாமைப் பணிப்பாளர்

திரு. ஜே. டி. நவரட்ணம், (A. I. B. Lond.), பொது முகாமையாளர்

திரு. ஏ. எம். எச். பாரி (B. A. Hons.)

திருமதி ஆர். பாலசுப்பிரமணியம்

SHABRA

207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22073, 24805

61, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு -4 தொலைபேசி: 589310, 500576


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

CHILTON
CHILTON
CHILTON
CHILTON
CHILTON

# உதயன்

31 08 1989 வியாழக்கிழமை

மலிவு விலையில் அறிமுகம்
Chilton Trip Switch
மின்பொறியியலில் புகழ்மிக்க
OTTERMILL CHILTON LTD
நிறுவனத்தாரின் தயாரிப்பு
சுந்தர்சன்
சந்தைமுன், மானிப்பாய்.

மண்டைதீவு கி. சே. பி. மக்களுக்கு

## ஆஸ்பத்திரி வீதி வங்கியில் நாளை ரூ. 4,000 நிவாரணம்

யாழ்ப்பாணம், ஆக. 31
வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மண்டைதீவு கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்த 118 குடும்பங்களுக்கு நாளை வெள்ளிக்கிழமை உற்பத்தி முயற்சிக்கான நன்கொடை நிவாரணக் கொடுப்பனவு ரூபா 4 ஆயிரம் வழங்கப்பட இருக்கிறது.

இலங்கை வங்கியின் ஆஸ்பத்திரிவீதி பிரதான கிளையில் காலை எட்டுமணி முதல் ஒருமணிவரை நிவாரணப் பணம் வழங்கப்படும்.

பணம்பெறத் தகுதியுடையவர்கள் கிராம சேவையாளரின் உறுதிப்பாட்டுடன் வரும்படியும் முகாமையாளர் அறிவித்துள்ளார். (ஓ-3)

## வடமராட்சிப் பகுதியில் குடும்பத் தலைவர்களை இழந்தவர்களுக்குப் புனர் வாழ்வு

### சேவாச்சிரமம் ஏற்பாடு

யாழ்ப்பாணம் ஆக 31
பருத்தித்துறை, அல்வாய், வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் குடும்பத் தலைவர்களை இழந்த விதவைகளுக்கும் குழந்தைகளைக் கொண்ட குடும்பங்களுக்கும் ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவச்சிரமம் புனர்வாழ்வு அளிக்கத் தீர்மானித்துள்ளது.

இதன் பொருட்டு இவ்வருடம் மே மாதத்துக்குப் பின் நிகழ்ந்த இறப்புக்கள் யாவும் அடுத்த மாதம் வரும் போயா தினத்தில் (14-9-89) சேவாச்சிரமத்தில் பதியப்படும்; என அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி வேலைவாய்ப்புத் துறைகளிலேயே புனர்வாழ்வுப் பணிகள் இடம்பெறும் என்று சேவாச்சிரமத்தைச் சேர்ந்த சுவாமி சித்ரூபானந்தா தெரிவித்தார்.

இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளில் சேவாச்சிரமத்துடன் தொடர்புள்ள அங்கத்தவர்கள் மூலம் புனர்வாழ்வுப் பணிக்கான நிதி பெறப்படும். (அ)

## சட்டத்தரணி கொலைகுறித்து விசாரணை நடத்தவேண்டும்

சட்டத்தரணி காஞ்சன் அபயபாலாவின் கொலை குறித்து பூரணவிசாரணை நடத்தவேண்டும் என்று இலங்கை வழக்கறிஞர்கள் சங்கம் கோரியுள்ளது.

இதற்காக விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்படவேண்டும் என்றும் சங்கம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையில் — கொல்லப்பட்ட சட்டத்தரணி அபயபால பிரபல சட்டத்தரணியும் மனிதஉரிமை இயக்கவாதியுமான பிரின்ஸ் குணசேகராவின் சகோதரியின் புதல்வர் ஆவார்.

திரு பிரின்ஸ் குணசேகராவிற்கும் பயமுறுத்தல் விடுக்கப்பட்டது தெரிந்ததே. (ஓ-எ)

## இனப்பிரச்சினை தீர்வுபற்றி--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
சியும் மேற்கொள்ளாமல் இந்தியப்படையை வெளியேறுமாறு ஜனாதிபதி வற்புறுத்துவதானது, வடக்கு கிழக்கில் மீண்டும் அமைதியின்மைக்கே வழி வகுக்கும்.

இலங்கையின் முக்கியமான பிரச்சினை தமிழ்பேசும் மக்களின் தேசிய இனப்பிரச்சினை என்பதைப்புரிந்து கொண்டு, அதற்கு நிரந்தரத்தீர்வு ஒன்று காண்பதன்மூலமே முழுஇலங்கையிலும் அமைதியை உருவாக்க முடியும் என்பதையும் ஜனாதிபதி பிரேமதாசாபுரிந்து கொள்ள வேண்டும் ஒரு குறிப்பிட்ட தமிழ்க்குழுவை திருப்திபடுத்துவது; ஜே. வி. பியை திருப்திப்படுத்துவது; ஜனாதிபதியை காப்பாற்றிக் கொள்வது என்ற அடிப்படையில் பிரச்சினைகளை அணுகாமல், இந்த நாட்டில் அமைதியும் சமாதானமும் வளர வேண்டும் இந்த நாட்டின் ஒருமைப்பாடு காப்பாற்றப்பட வேண்டும் என்ற அடிப்படையிலேயே பிரச்சினைகள் ஆராயப்பட வேண்டும்.

மறுபுறத்தில் இலங்கையின் ஒருமைப்பாட்டை காப்பாற்றவும், இலங்கை இந்திய ஒப்பந்தம், வெறும் ஏட்டுச்சுரைக்காயாக மாத்திரமே இருக்கின்றது என்பதை இந்திய அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். இந்திய அரசு எமக்கு உறுதிமொழி கொடுத்த அடிப்படையில் ஒப்பந்தத்தின் சரத்துக்கள் அமுலாக்கப்படவில்லை என்பதையும் நாம் இந்திய அரசுக்குசுட்டிக்காட்ட விரும்புகின்றோம். இந்த நிலையில் இந்திய அமைதிகாக்கும் படை வாபஸ் பெறப்படுவதானது நிலைமைகளை மேலும் சிக்கலாக்கும் என்பதையும் புரிந்துகொண்டு, இந்தியா செயற்பட வேண்டும் என வேண்டுகிறோம்.

தமிழ் பேசும் மக்களின் பிணக்குவியலின் மத்தியில் தான் ஜனாதிபதி தனது பதவியை காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்றோ, இந்தியா தனது கௌரவத்தை காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்றோ சிந்திக்கமாட்டார்கள் என்று நம்புகின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

★ அந்தியகால சேவையில் முதிர்ச்சி பெற்றவர்களது நவீன ஸ்தாபனம்!
★ குடாநாட்டில் சகல கிராமங்களுக்கும் எமது சேவை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது
★ பிறைற் ஹவுஸ் ★
(புனித யாகப்பர் ஆலய அருகில்)
210, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(ஸி-3584)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர்வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 31-08-1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

### செய்திச் சாரம்

## துர்க்கையம்மன் கொடி நாளை

யாழ்ப்பாணம், ஆக 30
பிரசித்திபெற்ற தெல்லிப்பளை துர்க்கையம்மன் தேவஸ்தான வருடாந்தமகோற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

உற்சவத்தையொட்டி சுகாதார், போக்குவரத்து ஏற்பாடுகள் யாவும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. (ஓ-31)

## இன்று

யாழ்ப்பாணம், ஆக. 31
நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் உற்சவகாலத்தில் நாவலர் மண்டபத்தில் இயங்கிய இலங்கை வங்கியின் விசேடகருமபீடத்தில் இன்று மாலை 5 மணிக்கு சான்றிதழ்களின் அதிஷ்டம் பார்க்கப்பட இருக்கிறது.

சான்றிதழ் பெற்றவர்களை இன்று ஐந்து மணிக்கு சமுகமளிக்குமாறு இலங்கை வங்கி வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஓ-3)

## சட்டத்தரணிகள் பகிஷ்கரிப்பு

கொழும்பு, ஆக. 31
சட்டத்தணி அபயபால கடத்தப்பட்டு இனந்தெரியாத நபர்களால் சுடடுக் கொல்லப்பட்டதற்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் கொழும்பில் நேற்று முன்தினம் நீதிமன்றங்களை சட்டத்தரணிகள் பகிஷ்கரித்தனர்.

சட்டத்தரணி அபயபாலாவின் இறுதிக்கிரியைகள் நடைபெறும் தினம் அன்றும் நீதிமன்றப் பகிஷ்கரிப்பு இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-எ)

## சுட்டுக்கொலை!

வடமராட்சி கிழக்கில் உள்ள கட்டைக்காடு என்னும் இடத்தில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கொலையுண்டவர் அப்பகுதியில் ரொட்டிக் கடை வைத்திருந்த நவரத்தினம் எனத் தெரிவிக்கப்பட்டது (ஓ 14)

## பொலிகண்டியில் இளைஞர் சடலம்

வல்வெட்டித்துறை, ஆக. 31
பொலிகண்டி ஏழு புளியடி வீதியில் சூட்டுக் காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

கொலையுண்டவர் பருத்தித்துறையைச் சேர்ந்த எஸ். லிங்கம் என அடையாளம் காணப்பட்டார். (ஓ-160)

ஞானக்கதிர்
அன்பு-அறநெறி-ஆன்மீகம்
மூன்றுவது இதழ் இப்போது அமோகமாக விற்பனையாகிக் கொண்டிருக்கிறது!
★ நல்லூர் கந்தனின் நான்கு வர்ண அழகிய அட்டைப் படம்.
★ உள்ளே நான்கு பக்க நல்லைக்கந்தன் உற்சவமலர்.
★ வேதத்தில் விஞ்ஞானம்;
★ வாரியார் வாய்மொழி.
★ உபநிடதங்கள் பற்றிய அறிமுகம்.
★ திருமகள் திருவருள் பெற...
★ நல்ல காலம் பற்றி (ஜோதிடம்)
★ பிள்ளையார் தீர்ப்பு, கந்தன்கருணை (சமயக்கதைகள்)
★ மாவிட்டபுரம், மருதடி, அநுமதி அம்மன் கோவில்கள் பற்றிய கட்டுரைகள்;
மற்றும் பல...
மாதந்தோறும் மலரும் இந்த சமய ஞானக் களஞ்சியம்;
இன்றே வாங்குங்கள்;
நல்லூர் [illegible]
[illegible] ரூபா மட்டுமே;

## வடமராட்சி மக்களுக்கு மீளக்குடியமரும் நிவாரணம்

யாழ்ப்பாணம், ஆக 31
வடமராட்சிப் பகுதி மக்களுக்கான மீளக்குடியமர்தல் நிவாரணம், சுயதொழில் கொடுப்பனவுகள் அடுத்த வாரம்முதல் வழங்கப்பட இருப்பதாக இலங்கை வங்கி பருத்தித்துறைக்கிளை முகாமையாளர் அறிவித்துள்ளார்.

மீளக் குடியமர்தல் நிவாரணக் கொடுப்பனவான ஆயிரம் ரூபாவும் தொடர்ந்து சுயதொழில் முயற்சிக்கான 4 ஆயிரம் ரூபாவும் அடுத்தவாரம் முதல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கிராமசேவையாளர் பிரிவுவிவரம் விரைவில் அறிவிக்கப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-3)

## அகதியாக வந்த இளைஞர்கள் முல்லைத்தீவில் சுட்டுக்கொலை

முல்லைத்தீவு, ஆக. 31
கொக்குதொடுவாயில் இருந்து அகதிகளாக வந்து முல்லைத்தீவுப் பகுதியில் தங்கியிருந்த இரு இளைஞர்கள் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்கள்.

வேலாயுதம்பிள்ளை பரம்சோதி (வயது 22), தர்மகுலசிங்கம் விக்னேஸ்வரன் (வயது 20) ஆகியோரே அந்த இருவரும் ஆவர்.

கடந்த திங்கட்கிழமை அலம்பில் வீதியில் 5 ஆம்—6 ஆம் கட்டைக்கிடையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தை அடுத்தே இவர்கள் கொலையுண்டனர் என்று சொல்லப்பட்டது.

சடலங்கள் செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன. (ஓ-92)

## நேற்று தீவிர தேடுதல்

கொழும்பு, ஆகஸ்ட் 31
தென் பகுதியில் பல இடங்களிலும் ஆயுதப் படையினர் நேற்று தீவிர தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

கொழும்பு, குருநாகல், பொலநறுவை, மாத்தறை ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளில் நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர். மேலும் தோட்டாக்கள், ராணுவச் சீருடைகள், வெடி மருந்துகள், துண்டுப் பிரசுரங்கள் என்பனவும் இத்தேடுதல் நடவடிக்கையின் போது கைப்பற்றப்பட்டன (ஈ-ரி)

## புதிய அமைப்பு...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
சம்பவங்கள், படுகொலைகள், அழிப்பு வேலைகள், சுதந்திரத்துக்கு எதிரான சம்பவங்கள் ஆகியவை பற்றியும் இந்த அறிக்கையில் விளக்கப்பட்டிருக்கிறது.

"இப்போது எமது மக்கள் பயப்பீதியுடனும், மனவிரக்தியுடனும் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன? நாம் அடக்கி அடிமைப்படுத்தி வைக்கப்பட்டுள்ளோம்; எமக்கு கருத்து சுதந்திரம் இல்லை; பத்திரிகைச் சுதந்திரம் இல்லை; மொத்தத்தில் நாம் அடிமையாக்கப்பட்டுள்ளோம்" என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த அமைப்பின் கொள்கைகள், நோக்கங்கள் தொடர்பில் ஐந்து விடயங்கள் விளக்கப்பட்டிருந்தன.

பல்வேறு குழுக்களின் நடவடிக்கையால் பயத்துடனும், பீதியுடனும் மௌனமாக இருக்கும் மக்களைத் தட்டி எழுப்பி, ஒரு வெகுஜனப் போராட்டத்தில் மக்களை ஈடுபடுத்தி மக்கள் உண்மையாகக் கொண்டுள்ள கருத்தை வெளிக்கொணர்வது தமது நோக்கங்களில் ஒன்று எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்திய அமைதிப்படையின் வருகை இந்த அறிக்கையில் கண்டிக்கப்பட்டிருந்தது டன் படையை வாபஸ் பெறும்படியும் வலியுறுத்தப்பட்டிருந்தது.

## தி. மு. க...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
யானதா என்று தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி கேட்டார்.

இது மாநில மக்கள் நடத்திய 'பந்த்' அல்ல; மாநில அரசு நடத்திய 'பந்த்' என்றும் திரு: இராமமூர்த்தி சொன்னார்.

இதேவேளை கேரள மாநிலத்தில் இடம்பெற்ற மோதல் ஒன்றின் போது இரண்டுபேர் உயிரிழந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது. (ஓ-எ)

## திருத்தவேலையை--

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
மாறு:-

★ சுக்குவலை - ஹபரணை மின்சாரப் பாதையில் உள்ள ஒபிலகந்த என்னும் இடத்தில் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு மின் விநியோகம் வழங்கும் 132 K.V. வலுவுள்ள நான்கு மின் கோபுரங்கள் ஜூலை நடுப்பகுதியில் சேதமாக்கப்பட்டன. அங்கு மின்சார சபை மேற்கொண்ட திருத்த வேலைகளில் மூன்று கோபுரங்கள் சீர் செய்யப்பட்டன. அவற்றில் இரு கோபுரங்கள் நிலத்தில் விழுந்து விட்டன. ஒன்று சீர் செய்யப்பட்ட நிலையிலேயே உள்ளது. விழுந்த கோபுரங்களைத் திருத்த மனம் வைத்தால் அதனைச் செய்ய முடியும். தமிழ் மக்கள் மின்சாரம் இல்லாது கஷ்டமுறுவதைச் சுட்டிக்காட்டி சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சு நடாத்தித் திருத்த வேலைகளைச் செய்ய மின்சார சபைத் தலைமை அலுவலகம் முயற்சிக்கவில்லை. அரசும் இது விடயத்தில் தலைமையக அதிகாரிகளைத் தட்டிக் கேட்கவில்லை என்று தெரிகிறது.

★ ஹபரணை, அநுராதபுரம், மதவாச்சி ஆகிய பகுதிகளுக்கு மாத்தளை 33 கே. வி. மின் கோபுரத்தில் இருந்து மின்சாரம் வழங்க மின்சார சபை முடிவு செய்து, அப்பாதையில் தொடர்பில்லாத மடவலை - நாலந்தா பகுதிக்கு 2 கோடி ரூபா செலவில், 6 கிலோ மீற்றர் தூரத்துக்கு மின் இணைப்பு வேலைகளை ஒரு வாரத்தில் பூர்த்தி செய்து மின்சாரம் வழங்கியுள்ளது.

★ அதன் பெறுபேறாகத் தற்சமயம் அநுராதபுரம் பகுதியில் பகலில் தொழிற்சாலைகள் இயங்கவும், இரவில் வீடுகளுக்கு மின்சாரம் கிடைக்கவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்துக்கு சுழற்சிமுறையில் மின்சாரம் வழங்கும் பொருட்டு சுன்னாகம் மின் நிலைய ஜெனரேட்டர்களை இயக்குவதற்குத் தேவையான அளவு ஹெவி டீசலை ஒழுங்காக அனுப்புவதில் கூடத் தலைமை அலுவலக அதிகாரிகள் அக்கறை காட்டுவதில்லை; (அ-8)

## பரந்தனில் வேட்டுக்கள்

யாழ்ப்பாணம், ஆக 31
பரந்தன் சந்தியில் உள்ள பெற்றோல் விற்பனை செய்யும் கடை ஒன்று நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தீக்கிரையானது.

அதனைத் தொடர்ந்து பரந்தன் சந்தியிலும் அதனை சூழ உள்ள பகுதிகளிலும் மாலை ஐந்து மணியளவில் தொடர்ச்சியான துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. (ஓ-76)

## காட்டிற்கு விறகு வெட்ட சென்றவர் சூட்டுக்குப் பலி!

### மற்றும் மூவரைக் காணவில்லை

முல்லைத்தீவு, ஆக31
முல்லைத்தீவுப் பகுதியில் உழவு இயந்திரம் ஒன்றில் காட்டிற்கு விறகு வெட்டச் சென்ற ஐவரில் ஒருவர் சூட்டுக்குஇலக்காகி மரணமானார், மற்றொருவர் காயமடைந்தார், மற்றும் மூவரையும் காணவில்லை.

சூட்டுக்குப் பலியானவர் வடிவேலு சுப்பிரமணியம் (வயது 32). இவர் முல்லைத்தீவு அகதிகள் முகாமைச் சேர்ந்தவர் என்றும் கொக்குத்தொடுவாயில் இருந்து அங்கு வந்தவர் என்றும் தெரியவருகிறது.

காயமடைந்தவரும் அதே இடத்தைச் சேர்ந்த க. ராசகுமார் (வயது30) என்று தெரிவிக்கப்பட்டது. இவர் முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கரைச்சிக் குடியிருப்பைச் சேர்ந்த செல்லத்துரை பாலசுப்பிரமணியம், க... கனகசிங்கம், எஸ். நி... வந்தன் ஆகிய மூவரும் காணாமற்போய்விட்டனர் என்று கூறப்பட்டது. (ஓ-92)

## கேரதீவு-சங்குப்பிட்டி பாதைச்சேவை:

## பஸ்கள், லொறிகளை ஏற்றுவது இடைநிறுத்தம்

பூநகரி, ஆக 31
எதிர்வரும் 2 ஆம் திகதியும் 3 ஆம் திகதியும் கேரதீவு — சங்குப்பிட்டி இணைப்புப் பாதையில் லொறி மற்றும் பஸ்போன்ற 6 சக்கரவாகனங்கள் ஏற்றப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

திருத்தவேலைகள் நடைபெற இருப்பதாலேயே இவ்விரு நாட்களிலும் இச்சேவை இடைநிறுத்தப்படுகிறது;

ஏனைய சேவைகளில் எந்த மாற்றமும் இல்லை, அவை வழமைபோல் இடம்பெறும் என்று பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ)

## படையினர் ரோந்து

புலோலியில் இருந்து நேற்று படையினர் பருத்தித்துறை நோக்கி கால்நடையாகவும் வாகனங்களிலும் சென்றனர்.

ரோந்தின்போது படையினர் சிலரை அவர்களுடன் கூட்டிச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதை அடுத்து மக்களின் நடமாட்டம் குறைந்தது. (ஓ-160)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சின்னப்பிள்ளை வேலன்

செல்வபுரம் பளையைச் சேர்ந்த திருமதி சின்னப்பிள்ளை காலமாகிவிட்டார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் 31-08-1989 வியாழக்கிழமை இன்று பிற்பகல் 2-00 மணியளவிலும், தகனக்கிரியை செல்வபுரம் பளை இந்து மயானத்திலும் நடைபெறும்; இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்;

தகவல்:- கணவன், பிள்ளைகள், மருமக்கள்;
செல்வபுரம்,
பளை. (1789)

### திரு. சுப்பிரமணியம் வேதநாயகம்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ்ப்பாணம் சுண்டிக்குளியில் வசித்தவருமான திரு; சுப்பிரமணியம் வேதநாயகம் (விவசாய விரிவாக்கப் பணிப்பாளர்) காலமாகிவிட்டார்.

இவர் மேரி யோசேப்பின் (பவளம்) சென். ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை ஆசிரியையின் அன்புக் கணவரும், சதாஜலன் (U. K.), கிருபாஜனனி, மரிஞ்ஜனனி திருக்குடும்பக் கன்னியர் மடம் (ஆங்கிலம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நெடுந்தீவு வாடி வீடு முகாமையாளர் காலஞ்சென்ற திரு. திருமதி சுப்பிரமணியம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்ற பக்தியாம்பிள்ளை (வலோரி) மேரி மாகிறேற் ஆகியோரின் மருமகனும் ஆவார்;

அன்னாரின் பூதவுடல் இன்று 31-08-1989 மாலை 3 00 மணிக்கு நல்லடக்கத்திற்காக 253/5, ஆஸ்பத்திரி வீதியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்படும்; இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்;

தகவல்;
இல; 253/5, ஆஸ்பத்திரி வீதி, மனைவி, மக்கள்;
(புனித யுவானியார் ஆலயம் முன்பாக)
யாழ்ப்பாணம்; (1852)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org